மலர்-5 இதழ்-122 செப்டம்பர் 16-30 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**




# புரட்டாசி சனிக்கிழமையும் விரதத்தின் முக்கியத்துவமும்

# ஈசன் என்பதன் பொருள்

ஈசன் என்ற சொல்லுக்கு அரசன், ஆள்ப வன், இறைவன், மூத்தவன், கடவுள், குரு, தலைவன் என பல பொருள்கள் உண்டு.

உலகைக் கட்டிக் காக்கின்ற சிவனே உலகின் தலைவனாக இருப்பதால் ஈசன் என குறிப்பிடப்படுகிறார். அவருடைய இடப்பாகத் தில் இடம் பெற்றிருக்கும் தேவிக்கு ஈஸ்வரி, ஈசானி, ஈசி என்றெல்லாம் பெயர்கள் உண்டு. சிவனுக்குரியநட்சத்திரமான திருவாதிரையை ஈசன் நாள் என்பர். அவர் விரும்பி அணியும் கொன்றை மாலைக்கு ஈசன் தார் என்று பெயர். சிவன் உறைந்திருக்கும் கைலாய மலை ஈசான மேரு எனப்படும். தன்னை நம்பி வந்தவருக்கு, அள்ளித் தரும் ஈர நெஞ் சமும், ஈகை குணமும்கொண்டவர் என்பதால், இவரை ஈசன் என்பர்




# பிரிந்த தம்பதியர் ஒன்று சேர

மன வேறுபாட்டால் பிரிந்து வாழும் தம்பதி யர் ஒன்று சேர வழிபட வேண்டிய திருத் தலம், கும்பகோணத்தை அடுத்துள்ள "ஸ்ரீவாஞ் சியம்" இத்தலம் காசிக்கு இணையாக கருதப் படுகிறது.

காசி தேசத்தில் புண்ணியமும் வளரும். பாவமும் வளரும். ஆனால் இங்கு புண்ணியம் மட்டுமே வளரும். ராகுவும், கேதுவும் ஒரே திருமேனியில் காட்சி தரும் இத் தலம் பிள் ளைப் பேறு அருளும் தலம். ஏழரை, அஷ்டம மற்றும் கண்டகச் சனி திசைப் பரிகாரத் தலமாகும்.

இங்கு ஆயுஷ் ஹோமம், சஷ்டியப்த பூர்த்திகள் செய்ய நீண்ட ஆயுள் கிட்டும். இங்குள்ள குப்த கங்கையில் நீராடி பித்ரு காரியங்களைச் செய்தால் பித்ரு தோஷ நிவர்த்தி கிடைக்கும்.

ராகு கேதுவை வழிபட கால, சர்ப்ப தோஷம் நீங்கும். இத் தலத்தில் ஓர் இரவு தங்கினாலேயே செய்த பாவங்கள் அனைத்தும் தீர்ந்து முக்தி கிடைக்கும்.




ஸ்ரீயாகிய திருவை (மஹாலஷ்மி) பரந்தா மன் தனது வாஞ்சையில் விரும்பி சேர்த்ததால் இத்தலம் ஸ்ரீவாஞ்சியம் எனப் பெயர் பெற்றது.

இங்குள்ள குப்த கங்கையில் நீராடி இறை வனையும், அம்பாளையும், மஹாலக்ஷ்மியையும் வழிபட்டால் பிரிந்துள்ள தம்பதியர் பிணக்குகள் அனைத்தும் தீர்ந்து ஒன்று சேர்வார்கள்.

# இடைக்காடார் கூறிய 32 அறப்பணிகள்

தெய்வங்களை வணங்குதல், இறைவனை துதி செய்தல், தினம் ஒரு ஜீவனுக்கு ஒரு பிடி உணவு வழங்குதல், ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதல், முன்னோர்களுக்கு திதி செய்வது, வறியவருக்கு உதவுவது, துறவிகளுக்கு மடம் அமைத்து கொடுத்தல், மனையில்லாதவர்க்கு வீடு வழங்குவது, இல்லறம் நடத்துபவருக்கு பொருள் உதவி செய்வது, தண்ணீர் பந்தல் சோலைகள் அமைத்தல், உடல் ஊனமுற்றோரை காப்பது, நோயளிகளுக்கு மருந்து அளித்தல், கோ தானம் செய்தல், திருமண உதவி, சிவனடியார்க்கு வேண்டுவன அளித்தல், உத்திராட்சம், திருநீறு, சிவபூஜைக்கு உரிய பொருள்கள் வழங்குதல், சிவ ஆகமங்களை ஓதுதல், அனைத்து வகை உதவி செய்தல் என பக்தர்களுக்கு உபதேஷம் செய்துள்ளார்.

# காஞ்சி பெரியவர்
## கவிஞர் கண்ணதாசனின் ஆருடம்

"காஞ்சி பெரியவாளை பத்தி கவியரசு கண்ணதாசன் அவர்கள் அன்று சொன்னது இன்று மெய்யாக நடக்கிறது. அவர் அன்று சொன்ன ஆருடத்தைப் பற்றி பார்ப்போம்."

“காஞ்சிப் பெரியவரின் அருமை இப்போது தெரியாது. இன்னும் 50 ஆண்டுகள் போனால், 'இந்து மதம் என்றால் என்ன?' என்று கேட் டால், 'மஹா பெரியவர்' என்று எதிர்கால மாணவன் பதில் எழுதுவான்" என்று கவியரசர் கண்ணதாசன் 1973ம் ஆண்டு 'அர்த்தமுள்ள இந்துமதம்' கட்டுரையில் கூறியிருந்தார்.


www.aanmeegamalar.com

உண்மையில், மஹா பெரியவர் ஸ்தூல சரீரத்துடன் நடமாடிக் கொண்டிருந்தபோது கொண்டாடப்பட்டதை விட தற்போதுதான் அதிகம் ஆராதிக்கப்பட்டு வருகிறார்.

‘அர்த்தமுள்ள இந்துமதம்’ நூலில் மஹா பெரியவா அவர்களை குறித்த சந்தேகங்களுக்கு, விமர்சனங்களுக்கு கவியரசர் மிக மிக அழகாக அதே சமயம் ஆணித்தரமாக பதிலளித்துள்ளார்.

மஹா பெரியவா 1973–ம் ஆண்டு, தேசமெங்கும் பாத யாத்திரை கிளம்பினார். அதுகுறித்து அப்போது கவியரசர் கண்ணதாசன் 'அர்த்தமுள்ள இந்துமதம்' தொகுதியில் எழுதிய அத்தியாயத்தை பார்ப்போம்...

பகவான் கீதையில் சொன்னது போல் வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர் ஒருவரே! பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம் ஆகிய யோகங்கள் கைவந்த ஒருவர், காஞ்சிப் பெரியவர்.

அதோ, அவர் எங்கே போகிறேன் என்று சொல்லாமலே போய்க் கொண்டிருக்கிறார். இந்த வயதிலும் எந்த வாகனத்திலும் ஏறாமல் போய்க் கொண்டிருக்கிறார்.

கைப்பிடி அவலிலேயே காலமெல்லாம் வாழும் அந்த மகா யோகி, தள்ளாத வயதிலும் வாலி பனைப் போல் புனித யாத்திரை தொடங்கி இருக்கிறார்.

தெய்வ நம்பிக்கை உச்சத்துக்குப் போய் விட்டால், வயது தோன்றாது. பழுத்

துப் போன பழம், மரத்தைக் கேளாமலேயே கீழே விழுகிறது.

முதிர்ந்த ஞானிகள் யாரிடமும் எதற்கும் விளக்கம் கேட்பதில்லை; அவர்களே முடிவெடுக்கிறார்கள். அவர்களுக்குத் திடீரென்று ஏதோ ஒன்று தோன்றுகிறது என்றால், ‘தெய்வம் அவர்களோடு பேசுகிறது’ என்று பொருள்.

சிருஷ்டியை வியப்போடு நோக்கி, ஆழ்ந்த கருத்துக்களைக் கண்டுபிடிப்பது ஞானிகளுக்கு மட்டுமே சாத்தியம். படிப்பறிவும், கேள்வியறிவும் மட்டுமே அவர்களுக்குத் துணை புரிவதில்லை. உள்ளொளி ஒன்று பரவி விரவி நிற்கிறது.

அதோ, அந்த ஒளியோடு அந்த மகா யோகி போய்க் கொண்டிருக்கிறார். அது வெறும் மானிட ஸ்தூலத்தின் யாத்திரையன்று. அது ஆன்ம யாத்திரை.

நாற்பது வயதுக்குள்ளாகவே பகவத் பாதாள் ஸ்ரீ ஆதி சங்கரர், காலடியில் இருந்து புறப்பட்டு, இமயம் முதல் குமரி வரை தன் காலடியை பதித்தார்.

அந்தக் கால்களிலும் காலணி இல்லை; இந்தக் கால்களிலும் இல்லை. ஆயினும் கற்கள் அந்தக் கால்களை உறுத்தவில்லை. முட்கள் தைத்தாலும் வலிப்பதில்லை. தெய்வத்தின் கருணை இந்தப் பாதங்களைப் பாதுகாக்கிறது.

காலணிகள் ஏதும் அணியாமல் வெற்று பாதத்துடன் மஹா பெரியவா யாத்திரை செய்து கொண்டிருந்தபோது !

மகா நதி பாறையின் மீது மோதினாலும், நதி சேதமடைவதில்லை; நாளாக நாளாக பாறை தான் அளவில் சுருங்குகிறது.

கங்கை நதியில் எவ்வளவு தண்ணீர் ஓடினாலும் சக்ரவாகப் பட்சி பனித்துளியைத் தான் நாடுகிறது.

சில வண்டுகள், மலரில் மட்டுமே அமர்கின்றன.

சில பறவைகள், பசுமையான மரங்களில் மட்டுமே அமர்கின்றன.

மகா யோகியின் வைராக்கியம் மணமிக்கது. பசுமையானது.

இரவும் பகலும் உலகில் மாறி மாறி வருகின்றன.

லௌகிகவாதிக்கு இரண்டும் ஒன்றாகவே தோற்றமளிக்கின்றன.

உலகத்தில் அவர்களுக்குள்ள உறவெல்லாம், தெய்வம் மட்டுமே.

அந்தத் தெய்வத்தின் பரிபாஷையைச் சாதாரண மனிதனுக்குச் சொல்லும் தூதுவர்கள் அவர்கள்.

அதனால்தான் மற்ற மனிதர்களின் தலையை விட அவர்களது பாதங்கள் உயர்ந்திருக்கின்றன.

லோகாயத சுகத்தை முற்றும் துறந்து விட்டுத் தார்மிக வடிவெடுத்து அவர்கள் புறப்படும்போது, தர்மம் நடைபாதை விரிக்கிறது.

மகா யோகம் மலர்கள் தூவுகிறது.

மகாராஜக்களுக்கு இல்லாத மரியாதை அவர்களுக்குக் கிடைக்கிறது.

ஆந்த்ராவில் ஒரு கோயில் கட்டப்படுகிறது. அதன் மூலஸ்தானத்தில் இன்னும் சிலை வைக்கப்படவில்லை. அங்கு போய்க் காஞ்சிப் பெரியவர் ஓரிரவு தங்கினாராம். ‘சிலை பிரதிஷ்டை ஆகி விட்டது என்று ஆந்திர மக்களெல்லாம் சந்தோஷப்பட்டார்களாம்.

அவர் பிராமண ஜாதியின் தலைவரல்ல. பிராமணர்கள் அப்படி ஒரு நிலைமையை உண்டாக்க கூடாது.

உலகெங்கிலும் உள்ள அஞ்ஞானிகளுக்கு ஞானக் கண் பேரொளி.

அவரது பெருமை இப்போது தெரியாது. இன்னும் ஐம்பது வருஷங்கள் போனால், ‘இந்து மதம் என்றால் என்ன?” என்ற கேள்விக்கு ‘ஸ்ரீ மஹா சுவாமிகள் என்ற சங்கராச்சாரிய சுவாமிகள்” என்று எதிர்கால மாணவன் பதில் எழுதுவான்.

அந்த ஞானப் பழத்தை தரிசித்த போது
நான் பெற்ற உள்ளொளியை
விவரிக்க முடியாது.

கோடியில்



ஒருவரே எப்போதாவது இப்படி ஆக முடியும்.

**செஞ்சி கோட்டைக்குப் போகிற வர்களெல்லாம் ராஜா தேசிங்கு அல்ல. காவி கட்டிய எல்லோருமே மகா யோகிகளல்ல.**

ஞானம், வித்தை, ஒழுக்கம், பண்பாடு, ஆகிய அனைத்தும் சேர்ந்த மகாயோகி எங்கோ எப்போதோ அவதரிக்கிறார்.

அதோ, அவர் நடந்து போய்க் கொண் டிருக்கிறார்.

சாலையின் இரு மருங்கிலும் அந்த யோகி யைத் தரிசிக்க ஜனக் கூடம் திரளுகிறது.

இறைவன் கருணையினால், நமக்குக்கிடைத்த அந்த வரம் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும்.

தாய், குழந்தைக்குத் தாலாட்டுப் பாடும் பொது, அவரைப் பற்றிப் பாட வேண்டும்.

பள்ளிக் கூடப் பாடப் புத்தகங்களில் அவரைப் பற்றிக் குறிக்க வேண்டும்.

ஒரு உத்தமமான யோகியை ‘பிராமணன்” என்று ஒதுக்கி விடுவது, புத்தியுள்ளவன் காரிய மாகாது.

மேதைகளும், கற்புக்கரசிகளும் எந்த ஜாதி யிலும் பிறக்கலாம்.

பசுக்களிலே மலட்டுப் பசுக்களைக் கூட அறுக்கக் கூடாது என்பது இந்துக்களின் வாதம்.

யோகிகளில் ஒரு சாதாரண யோகியைக் கூட ஒதுக்கக் கூடாது என்றால் இந்த மகா யோகியைப் பிராமணதல்லாதோர் ஒதுக்குவது எந்த வகையில் நியாயம்?

அதோ, அவர் நடந்து போய்க் கொண் டிருக்கிறார்.

புத்தன் சொன்னதை விட அவர் நமக்கு அதிகமாகச் சொல்லியிருக்கிறார்.

ஏசுவின் தத்துவங்களை விட அதிகமான தத்துவங்களை வாரி இறைத்திருக்கிறார்.

அவர் ஜாதி வெறியராகவோ, மத வெறிய ராகவோ ஒரு நாளும் இருந்ததில்லை.

அரசியல் வில்லங்களில் மாட்டிக் கொண்ட தில்லை.

பகவான் கீதையில் சொன்னது போல் வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர் ஒருவரே.

அதோ, அவர் நடந்து போய்க் கொண்டிருக் கிறார்.

அந்தக் காலடிச் சுவடுகளைத் தொடர்ந்து செல்லுங்கள்.

அதுவே உங்கள் யோகமாக இருக்கட்டும்.

– கவியரசு கண்ணதாசன்

# முருகனுக்கு உகந்த இருபது வகை காவடிகள்

முருகனுக்குரிய காவடி களில்மிகவும்முக்கியமானதாக கருதப்படுவது 20 காவடி களாகும். அந்த காவடிகளைப் பற்றி பார்ப்போம்.

தங்கக் காவடி,
வெள்ளிக் காவடி,
பால் காவடி,
சந்தனக் காவடி,
பன்னீர் காவடி,
சர்க்கரைக் காவடி,
தீர்த்தக் காவடி,
எண்ணெய்க் காவடி,
அன்னக் காவடி,
இளநீர் காவடி,
அலங்காரக் காவடி,
அக்கினிக் காவடி,
கற்பூரக் காவடி,
சர்ப்பக் காவடி,
மச்சக் காவடி,
சேவல் காவடி,
மணல் காவடி,
புஷ்பக் காவடி,
பறவைக் காவடி,
தேர்க் காவடி



# குளிக்கும் முறை, பலன்களைப் பற்றி அகத்தியர் கூறும் விஷயங்கள்

உடல் சுத்தம் வேண்டி ஒவ்வொருவரும் செய்யும் விஷயம், நீராடல். ஒருவர் எப்படி நீராட வேண்டும் என்பது பற்றி அகத்தியர் சில விஷயங்களை தெரியப்படுத்திருக்கிறார்.

❖ குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்கவேண்டும். ஏனெனில் இவை இரண்டும் உத்தம திசைகள். கர்மம் செய்தபின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம். மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல் வலி வந்து சேரும்.

❖ ஒவ்வொருவரும் தினமும் கங்காஸ்நானம் செய்ய முடியும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். தினமும் குளிப்பதற்கு முன்பாக முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிரவிரலால் 'ஓம்' என்று தியானம் செய்து எழுதுங்கள். அந்த நீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும். ஒரு நிமிட தியானத்தில் 'இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து,இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று இறைவனை வேண்டிக்கொள்ள வேண்டும்.

❖ அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும். உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி. எனவே தண்ணீரை கால் முதல்மேல் நோக்கி நனைத்து வந்து, கடைசியில் தலையில் ஊற்றிக் கொள்ளவேண்டும். நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகின்ற சக்தி உண்டு. காலில் இருந்து பரவும் குளிர்ச்சி, மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.

❖ தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை 'பிரஷ்டம்' என்பார்கள். அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வேகம் கூடுதலாக பரவும். ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைத் தான் துடைக்க வேண்டும்.




❖ குளித்து முடித்ததும் உடலை சுத்தம் செய்ய, நம்மில் பலரும் ஈரம் படாத துண்டைத் தான் உபயோகிப்பார்கள். ஆனால் அது சரியல்ல... குளிக்கும் நீரிலேயே துண்டை நனைத்துப் பிழிந்து துவட்டுவதுதான் உத்தமம். உலர்ந்த துணியானது, உள் சூட்டை வேகமாகப் பரவச் செய்து, பலவித உள் வலிகளை ஏற்படுத்தும்.

❖ பிறருடன் வாய்திறந்து பேசக்கூடாதமூன்று நேரங்களில் ஒன்று, குளியல் நேரம். அந்த நேரத்தில் மவுனத்தை கடைப் பிடிக்க வேண்டும். அல்லது மனதளவில் இறைவனின் ஜெபத்தை உச்சரிக்கலாம்.

❖ பஞ்ச இந்திரியங்களால் செய்த தவறுகளினால், நமக்குள் சேர்த்து வைத்துள்ள கர்மாக்கள், குளிப்பதன் மூலமாக களையப்படுகிறது.

❖ குளிக்கும் போது, வாயில் கொள்ளளவு நீரை வைத்து குளித்தபின் துப்புவதால், கழுத்துக்கு மேல் வருகிற நீர் சம்பந்தமான கட்டுகளை, நோய்களை தவிர்க்கலாம். வாயில் இருக்கும் நீர் மேல் நோக்கி எழும்பும் அக்னியின் வேகத்தை கட்டுப்படுத்தும்.

❖ குளம், ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளில் எல்லா தேவதைகளும், பெரியவர்களும் அரூபமாக ஸ்நானம் செய்வதாக கூறுகிறார்கள். 'நாரம்' என்கிற தண்ணீரில் நாராயணன் வாசம் செய்வதாகவும் சொல்வார்கள். ஆதலால் ஓடிச் சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்கவேண்டும்.

❖ நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோக் கூடாது. நீரின்றி ஒரு உயிரும் இல்லை. நீரை விரயம் செய்வதால், கடன் அதிகரிக்கும். உப்பு நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களை அறுக்கும்.




# இயற்கை மருத்துவம்

- வசம்பு தூளை தேங்காயெண்ணெயில் சிவக்க கொதிக்க வைத்து வடிகட்டி சிரங்கு மீது தடவி வர சொறி சிரங்கு குணமாகும்.
- வல்லாரை கீரையை பசும்பாலில் அவிய விட்டு உலர்த்தி பொடியாக்கவும். இந்த பொடியை வாரம் ஒருமுறை பால், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டு வர மலச்சிக்கல் வராது.
- கடுக்காய் வேர், பட்டை, இலை, பூ உலர்த்தி இடித்து சலித்து காலை, மாலை அரை கரண்டி பசும்பாலில் கலந்து சாப்பிட்டு வர தொழுநோய் குணமாகும்.
- நெல்லெண்ணெயில் வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கற்பூரம் போட்டு காய்ச்சி தினசரி 3 வேளை இரண்டு சொட்டு விட்டு வர காதுவலி குணமாகும்.
- வெற்றிலையை நறுக்கி தேங்காயெண்ணெயில் காய்ச்சி சிவந்தவுடன் இறக்கி ஆற வைத்துக்கொள்ளவும். காலை, மாலை இரண்டு சொட்டு காதில் விட்டு வர காதில் சீழ் வடிதல் நின்று போகும்.
- வெந்தயத்தை வேக வைத்து தேன் விட்டு பிசைந்து கூழாக்கி உட்கொள்ள மார்பு வலி குணமாகும்.
- கண்ணாடித்துண்டால் காயம் ஏற்பட்டால் வாழைப்பழத்தோலை அந்த காயத்தின் மீது வைத்துக்கட்ட ரத்த போக்கு நின்று காயம் விரைவில் ஆறும்.
- பேர்ரத்தை, நிலவேம்பு சம அளவு சேர்த்து அரைத்து நீரில் சுண்ட காய்ச்சி காலை, மாலை குடித்து வர குளிர் காய்ச்சல் குணமாகும்.
- அதிமூத்திரம், நீர்த்தடை, வயிற்று எரிச்சல், உடம்பு குடைச்சல், வாதம், சுவாசக்காசம், கபநோய், இருமல் ஆகியவற்றிற்கு முள்ளங்கி நல்லது.
- முசுமுசுக்கை இலையை வெங்காயத்துடன் நெய் விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்து சாப்பிட்டு வர ஆஸ்துமா, மூச்சு திணறல் குணமாகும்.
- மந்தாரை இலையுடன் கொத்தமல்லி, இஞ்சி, உளுந்து, உப்பு, புளி, மிளகாய் சேர்த்து வதக்கி துவையலாக சாப்பிட்டு வர வாந்தி நிற்கும்.
- அரசமரக்கொழுந்து, ஆலமரக்கொழுந்து, அத்திமரக்கொழுந்து மூன்றையும் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்து சாப்பிட இரத்த மலப்போக்கு நிற்கும்.
- விளாம்பழம் தொடர்ந்து சாப்பிட கல்லீரல்

நோய் குணமாகும்.

❖ வெள்ளரிப்பிஞ்சு இருதய நோய்களை குணப்படுத்தும் தன்மையுடையது.

❖ பழைய புளி, சுண்ணாம்பு சேர்த்து பிசைந்து தேனீ கொட்டிய இடத்தில் ஒட்டி வைத்தால் வலி குணமாகும்.

❖ இரவில் தலையணையில் செம்பருத்தி இலைகளை வைத்து படுத்து வந்தால் தலைப்பேன்கள் ஒழியும்.

❖ திப்பிலி, சுக்கு, எள் மூன்றையும் சம அளவு எடுத்து இடித்து தூள் செய்து ஒரு நாளைக்கு மூன்று வேளை தேனுடன் சாப்பிட்டு வர மூல நோய் குணமாகும். மூல நோய்க்கு துத்திக்காய் மிகவும் நல்லது.

❖ இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் மாம்பழம் சாப்பிடுவது நல்லது.

❖ தினமும் காலையில் சாப்பிட்டவுடன் வென்னீரில் தேன் கலந்து குடித்து வர ஞாபக சக்தி அதிகமாகும்.

❖ கோதுமையை பொன்னிறமாக வறுத்து அரைத்து சலித்து தேன் கலந்து சாப்பிட மூட்டு வலி குணமாகும்.

❖ திருநீற்றுப்பச்சை இலைச்சாற்றை மூக்கில் நுகர தும்மல் வந்து மூளைக்காய்ச்சல் கிருமி வெளியேறும்.

❖ வெள்ளைப்பூண்டை கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வர இடுப்பு வலி குணமாகும்.

❖ தும்பை இலைச்சாறு எல்லா விஷக்கடிகளுக்கும் சிறந்தது.

❖ வெந்தயம், குன்றிமணி பொடி செய்து தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து ஒரு வாரத்திற்குப்பின் தினமும் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும். வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேக வைத்து ஒரு நாள் கழித்து மறுநாள் வேக வைத்த நீரை கொண்டு தலை முழுகி வந்தாலும் முடி உதிர்வு நிற்கும். பேன் நீங்கும்.

❖ நல்ல சுண்ணாம்பில் விளக்கெண்ணெய் கலந்து குழப்பி பித்த வெடிப்பு கண்ட இடத்தில் தடவி வந்தால் விரைவில் குணமாகும்.

❖ தினமும் 5 ஆவாரம்பூ அல்லது 1 கோவை பழம் சாப்பிட சர்க்கரை நோய் குணமாகும்.

❖ வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சிறிது பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி குணமாகும்.

❖ மூளை பலம் பெற எலுமிச்சை பழம் மிகவும்



நல்லது.

- விளாம்பூக்களை சுத்தம் செய்து நீரில் கொதிக்க விட்டு வடிகட்டி உள்ளுக்கு சாப்பிட்டு வர எலி விஷம் நீங்கும்.
- தீப்புண்ணால் தோலின் நிறம் மாறி வெள்ளையாக இருந்தால், வேப்பம்பட்டை கஷாயம் செய்து பாட்டிலில் வைத்து குலுக்கி வரும் நுரையை வடு மீது தடவி வர தோல் பழைய நிறம் பெறும்.
- காலில் முள் குத்திய இடத்தில் முள்ளை எடுத்த பின் வெற்றிலையில் நல்லெண்ணெய் தடவி அணலில் வாட்டி சூட்டோடு வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் வலி பறந்து விடும்.




- நாவல் பழம் வாயுத்தொல்லை, வயிற்றுப் புண்களை ஆற்ற வல்லது.
- கருந்துளசி இலைச்சாறு பிழிந்து இரண்டு வேளை 3 நாட்கள் சாப்பிட்டு வர கபக்கட்டு வெளியேறும்.
- சௌசௌ சாப்பிடுவதால் எலும்புகளுக்கு உறுதியும், பற்களுக்கு பலமும், ஜீரண சக்தியும் கிடைக்கறது.
- வாழைப்பூ வாரம் ஒருமுறை சாப்பிட்டால் வயிற்றுப்புண் குணமாகும்.
- நாயுருவி வேரை அரைத்து கோலி குண்டு அளவு உருட்டி 15 நாள் சாப்பிட்டு வர வெறிநாய் கடி குணமாகும்.
- அகத்தி கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலை, மாலை 4 ஸ்பூன் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் குணமாகும்.
- கருணைக்கிழங்கு வாரம் இருமுறை உணவில் சேர்த்தால் மூலம் கட்டுப்படும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203









# திருச்சி உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி விநாயகரின் சக்திகளை ஒருங்கே பெற்ற

# வல்லம் குடைவரைகோயில்

மலைமீது அமைந்துள்ள பிள்ளையார் திருச்சி
உச்சிப்பிள்ளையார் கோயிலும் அல்ல...
பாறையை குடைந்து உருவாக்கப்பட்ட
பிள்ளையார் பிள்ளையார்பட்டி
பிள்ளையாரும் அல்ல...

இந்த இரண்டு சிறப்புகளும் ஒருங்கே அமையப் பட்டுள்ளது வல்லம் குடைவரைகோயில்.. திருக் கழுக்குன்றம் பகுதிமக்கள் செங்கல்பட்டு வழி யாக நிறையமுறை சென்றிருந்தாலும் தரிசிக்க வாய்ப்புகிடைக்காத கோயில் இது.

திருக்கழுக்குன்றத்திலிருந்து செங்கல்பட்டு செல்கையில் வலதுபுறமும் செங்கல்பட்டிலிருந்து வருகையில் இடதுபுறமும் அமைந்துள்ளகோயில். பிரதான சாலையிலிருந்து 500 மீட்டர் தொலை வில் அமைந்துள்ளது.

**கல்வெட்டு தகவல்**

செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் சாலையில் செங்கல்பட்டிலிருந்து 5 கிலோமீட்டர் தொலை வில் வல்லம் அமைந்துள்ளது. இந்த ஊரின் மேற்கே கிழக்கு பக்கம் பார்த்தவாறு மூன்று குடைவரை கோயில்கள் உள்ளன.

பெரிய குடைவரை கோயில் வசந்தீஸ்வரம் என அழைக்கப்படுகின்றது.குடைவரை தூண்களில் பகாப்பிடுகு. லலிதாங்குரன். சத்ருமல்லன். குண பரன் ஆகிய மகேந்திரவர்மனுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த குடைவரை கோயிலினை மகேந்திர போத்தராஜனிடம் சிற்றரசார்களாக இருந்த வயந்தபிரி அரசனின் மகன் சுந்தரசேனன் என்ப வர் கட்டியிள்ளார். தேவகுலம் என்கின்ற பெயர் சிவன்கோயிலினை குறிப்பதாக அமைந்துள்ளது. வேதாந்த ஈஸ்வரம் என கிபி 13 ம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது குடைவரை கோயிலினை லக்க சோமாசியார் மகன் எடுத்துள்ளார். மூன்றாவதாக உள்ள குடைவரைகோயிலினை பல்லவபேரரசர்








மகள் கொம்மை எடுத்துள்ளார்.

களத்தூர் கோட்ட வல்லநாட்டு வல்லத்து உடையார் திருவயீந்தீகரமுடைய நாயனார் என்று கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டில்இறைவன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.வஸந்தபிரியரசர் மகன் சுந்தசேனன் தனது தந்தையார் பெயரில் தோற்றுவித்த குடைவரை கோயில்திருவயீத்திசுரம் என உறுதியாகின்றது.

இக்குடைவரையின் துவார பாலகர்களானநந்தி மாகாளர் சிற்பங்கள் மகேந்திரவர்மன் காலத்தவை. கோட்டத்தெய்வங்களான விநாயகர். சேட்டை ஆகியவை இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராஜசிம்ம பல்லவன் காலத்தவைஞ்

## கோயில் அமைப்பு:

ஏழாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டின் செங்கல் பட்டு மாவட்டத்தில் உள்ள வல்லம் என்ற ஊரில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் கட்டிய குட வரைக் கோவில் இது. இங்கே ஒரு பெரிய மூதேவியின் சிலைஉள்ளது. சமசுக்கிருதம் எனும் தமிழ்கொண்டு சமைத்த மொழியில் வடிவாய்க் கூறினாலும், அதன் தமிழ்ப்பெயர் மூதேவி என்பதாகும்.

இம்மூதேவியைத்தான்பல்லவ மன்னர்களும் தங்கள் குலதெய்வ மாகக் கொண்டாடி வந்துள்ளனர். அவ்வளவு ஏன்? அவர்களைப் பிற் காலத்தில் வென்றுப்பேரரசைநிறுவிய இடைக்காலச் சோழர்களும்கூட இம் மூதேவிக்குச் சிறப்பான வழிபாடுகள் செய்துள்ளனர்.

பல்லவர்கள் கல், மரம் உலோகம், சுண்ணாம்பு இன்றி இயற்கையாய் அமைந்த மலைகளையும் பாறைகளையும் குடைந்து குடவரைக் கோயில் களை உருவாக்கித் தனித்துவம் படைத்தனர். தொண்டை மண்டலத்தில் எங்கெல்லாம் வள மான, நன்கு விளைந்த, முதிர்ந்த பாறைகள் இருந்தனவோ, அங்கெல்லாம் அருமையான கலைக் கோயில்களை உருவாக்கினர்.

அவ்வாறு உருவான தலங்களுள் ஒன்றுதான் இந்த வல்லம். செங்கல்பட்டு அடுத்துள்ளவல்லம், "பட்சி தீர்த்தம்' என்று போற்றப்படும் திருக் கழுக்குன்றத்திற்குச் செல்லும் வழியில் அமைந் துள்ளது. இத்தலத்தின் புராண வரலாற்றுக்கும் திருக்கழுக்குன்றத்துக்கும் தொடர்புண்டு.

தொண்டை மண்டலத்தில் குடைவரைகளின் தொடக்க காலத்தில் மகேந்திர பல்லவரால் எடுப்பிக்கப்பட்ட ஏழு குடைவரைகளன்றி ஏழாம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட மற்றுமொரு குடைவரை வல்லம் குடைவரையாகும்.

வல்லம் என்னும் சிற்றூர் செங்கல்பட்டுமகா பலிபுரம் சாலையில் செங்கல்பட்டிலிருந்து சுமார் 4கிலோ மீட்டர் தொலைவில்அமைந்துள்ளது. இவ்வூரின் வடகோடியில் உள்ள சிறிய குன் றில் மூன்று குடைவரைகள் அமைந் துள்ளன.


வேலன்

இக்குன்றினை அடைய படி வரிசை அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் குன்றின் மேலுள்ள முதலிரண்டு குடைவரைகள் பிற்கால கட்டட அமைப்புகளால் சூழப்பட்டு காட்சியளிக்கின்றன.

இக்குடைவரைகளுக்குவடக்கே சற்று கீழ்ப்புறத்தேயுள்ள பாறைச் சரிவில் மூன்றாவது குடைவரை அமைந்துள்ளது. இம்மூன்று

குடைவரைகளுமே மண்டபக் குடைவரைகளாகும்.

### முதல்குடைவரை

இக்குடைவரையைச் செய்தவர் மகேந்திர வர்மனின் அடியவரான வயந்தப்பிரியரசரின் மகன் கந்தசேனன் என்பதையும், இக்குடைவரை, திருவயந்தீஸ்வரம் என்று அழைக்கப்படுவதையும் குடைவரைக் கல்வெட்டுகளிலிருந்து அறிகி றோம்.

குடைவரைக்குச் செல்லும் படிக்கட்டுகள் முடியும் இடத்தில் குடைவரைப் பாறையின் வடமுகத்தே கிழக்குப் பார்வையாய் அமைந்த கோட்டத்தில் தனியராக ஜேஷ்டா தேவியின் புடைப்புச் சிற்பம் சிதைவுற்ற நிலையில் காணப் படுகிறது.

குடைவரையின் தென்புறம் கிழக்கு நோக்கிய ஆழமான கோட்டத்தில் லலிதாசனத்தில் பிள்ளையார் சிற்பம் அழகு மிளிரும் வகையில் உள்ளது.

இக்குடைவரை முகப்பு, மண்டபம், கருவறை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

### குடைவரைமுகப்பு

கிழக்கு நோக்கிய குடைவரையின் முகப்பில் இரண்டு முழுத்தூண்களும், பக்கத்திற்கொன்றாக இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. தூண் கள் சதுரம், கட்டு, சதுரம் அமைப்பைக்கொண் டுள்ளன. சதுரங்களில் பதக்கங்கள் காணப் படவில்லை.

முகப்புத் தூண்களின் போதிகைகள் விரி கோணக் கைகளால் உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனம் கூரையையொட்டி அமைந்துள்ளது. நன்கு வெளிநீட்டப் பெற்ற கூரை, வடிவமைக்கப்படாத கபோதமாகியுள்ளது.

### மண்டபம்

முகப்புத் தூண்களையடுத்து அமைந்துள்ள மண்டபத்தின் பக்கச் சுவர்கள் வெறுமையாகக் காணப்படுகின்றன. மண்டபக் கூரையை ஒட்டி வாஜனம் ஓடுகிறது. மேற்குச் சுவரின் மையத்தில் கருவறைக்கான வாயில் உள்ளது. கருவறையை அடைய மண்டபத் தரையில் சந்திரக் கல்லா லான ஒரு படியும், அதன் மீது மற்றொரு படியும் அமைந்துள்ளது. கருவறை வாயிலின் இருபுறத் திலும் அணைவுத் தூண்களின்றி அகழப்பட்ட கோட்டங்களில் வாயிற்காவலர்கள் அணி செய்கின்றனர்.

மண்டபத்தின் தென்புறத்தில் மேடையொன்றில் பிள்ளையார், தனது தேவியருடன் முருகன், சண்டேஸ்வரர், நாகம் ஆகிய சிற்பங்களும், வடப்புறம் சிறிய மேடை மீது அம்மன் சிற்பமும் காணப்படுகின்றன.

மண்டபத்தின் வடபுறச் சுவரையொட்டி தெற்குப் பார்வையாக ஜேஷ்டா தேவியின் சிற்பம் உள்ளது. மாந்தன், அக்னி மாதாவுடன் அமைந்த நிலையில் இருக்கும் இச்சிற்பம் அவ்வூரின் கோயில் குளத்தில் கிடைத்தது என கோயிலைப் பாதுகாத்து வரும் திரு. செல்லப்ப குருக்கள் கூறினார்.

### கருவறை:

கருவறையின் தரை, கூரை, சுவர்கள் வெறுமையாக உள்ளன. தரையின் நடுவே பிற் காலத்தில் அமைக்கப்பட்ட இலிங்கபாணம் பாத பந்த அமைப்பிலான வேசர ஆவுடையாருடன் காணப்படுகிறது.

### இரண்டாம் குடைவரை

வசந்தீஸ்வரம் குடைவரையின் நேர் கீழேயுள்ள பாறையினைக் குடைந்து கிழக்குப் பார்வையாக அமைக்கப்பட்டுள்ள இக்குடைவரை முகப்பும், மேற்குச் சுவரில் கருவறையும் கொண்டமைந்த மண்டபம் ஆகும்.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

### முகப்பு

மண்டபத்தின் முகப்பில் இருபுறமும் பாறையோடு ஒட்டிய இரண்டு நான்முக அரைத்தூண்களின் மீது அமைந்துள்ள போதிகைகள் உத்திரம் தாங்குகிறது. கூரையொட்டி முகப்பின் நீளத்திற்கு வாஜனம் காணப்படுகிறது. கூரையின் முன் நீட்சி வடிவமைக்கப்படாத கபோதமாக அமைந்துள்ளது. முகப்பின் வெளிப்புறத்தில் பாறையின் நீட்சிச் சரிவின் தென் சுவரில் அழகிய பிள்ளையார் சிற்பம் காணப்படுகிறது.

### மண்டபம்

மண்டபத்தின் வட, தென் சுவர்கள் வெறுமையாக உள்ளன. பின்சுவரின் நடுவே கருவறையும், வாயிலும் அகழப்பட்டுள்ளது. கருவறை வாயில், உறுப்பு வேறுபாடற்ற நான்முகத் தூண்களைக் கொண்டுள்ளது. கருவறையின் இருபுறத்திலும் அகலமான, ஆழம் குறைவான கோட்டங்களில் வாயிற்காவலார்கள் இடம் பெற்றுள்ளனர்.

### கருவறை

கருவறையின் தரை, சுவர்கள், கூரை அனைத்தும் நங்கு சமன் செய்யப்பட்டு, ஆனால் வெறுமையாக காணப்படுகிறது.

### மூன்றாம் குடைவரை

மேற்கூறிய குடைவரைகளுக்கு வடக்கில் தாழ்வான பாறைச்சரிவில் கிழக்குப் பார்வையாக இம்மூன்றாம் குடைவாரை அமைந்துள்ளது.

இம்மண்டபக் குடைவரை முகப்பு, மண்டபம், கருவறை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

### முகப்பு

முகப்பின் வட, தென் சுவர்களையொட்டி இரண்டு நான்முக அரைத்தூண்கள் அமைந்துள்ளன. இவற்றின் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன. இவ்விரு அரைத்தூண் களுக்கிடையில் தூண்களற்ற நிலையில் போதிகையின் விரிகோண அமைப்புகள் காட்டப்பட்டுள்ளன. உத்திரத் தினையடுத்து கூரையைத் தழுவி வாஜனம் முகப்பு முழுவதும் காணப்படுகிறது. கூரையின் நீட்சி வடிவமைக்கப்படாத கபோதமாய் அமைந்துள்ளது.

### மண்டபம்

மண்டபத்தின் தென்சுவர் வெறுமையாக விடப்பட்ட நிலையில் அதன் வடசுவரில் அகழப்பட்டுள்ள கோட்டத்தில் நின்ற நிலையில் கொற்றவையின் சிற்பம் அமைந்துள்ளது. பின்சுவரில் நடுவில் வெட்டப்பட்டுள்ள வாயிலின் இருபுறத்திலும் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலர்கள். கருவறை வாயிலின் முன்னே முதல் படி நிலாக் கல்லாகவும், அதையடுத்து இரண்டாவது படியும்







உள்ளன.

### கருவறை

கருவறையில் பீடங்களின் மீது காட்சியளிக்கும் திருமால் தன் தேவியருடன் னின்ற நிலை சிற்பங்கள் பிற்காலத்தயவை ஆகும் கோயிலுக்கு சொந்தமான பெரிய குளம் அருகில் உள்ளது.

### கோயிலின் சிறப்புகள்

சுமார் 1000 வருடங்களுக்கு முன்னர் சித்தர்களால் செய்யப்பட்ட பாதரச கொலுசு அம்மனுக்கு அபிஷேகத்தின்போது அணிவிக்கப்படுகின்றது.

தினமும் சூரியகதிர்கள் இறைவன் மீது படுகின்றது. கருடன் கோயிலினை தினமும் சுற்றி வருகின்றது.

### திருஞானசம்பந்தர் வழிபட்ட தலம்

அம்மன் ஞானாம்பிகை முக்கண் உடையவராக திகழ்கின்றார். சந்தனம் மற்றும் குங்குமத்தால் நெற்றிதிலகமிட்டு மூன்றாவது கண்ணை மறைத்துள்ளார்கள். அபிஷேகத்தின்போதுதான் அதனை பார்க்கமுடியும்.

ஆலயதொடர்புக்கு: திரு செல்லப்பா: 9443172894 தகவல்கள் உதவி: திரு.சரவணன். திரு.வெங்கடேசன்.

**– வேலன், போன்: 9894836096**
**திருக்கழுக்குன்றம்.**

# மகத்துவம் வாய்ந்த வில்வத்தின் பலன்கள்

## சகல பாவம் தீரும்

சிவ வழிபாட்டுக்கு எத்தனையோ மலர்கள் உகந்ததாக உள்ள போதிலும், வில்வ இலை தனித்துவம் கொண்டது. வில்வ இலையால் சிவனை அர்ச்சனை செய்து வழிபடும் போது கிடைக்கும் பலன்கள் ஏராளம். யார் ஒருவர் தினமும் சிவாலயத்துக்கு சென்று வில்வத்தை வழங்கி ஈசனை வழிபடுகிறாரோ, அவரது சகல பாவங்களும் நீங்கி விடும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. வில்வமானது பாதிரி, வன்னி, மந்தாரை, மா ஆகிய மரங்களுடன் தேவலோகத்தில் இருந்து வந்த "பஞ்ச தருக்கள்" என்ற சிறப்பைப் பெற்றது.




## நெருப்பின் அம்சம் வில்வம்

நம்முடைய பூமியில் பல விதமா தாவரங்கள் உள்ளது என்று நாம் அறிவோம். இங்கே வில்வ மரத்தை ஏன் சிவனுக்கு தேர்வு செய்தார்கள். வில்வ மரத்தை பற்றி புரிந்தால் ரகசியம் புரியும்.

வில்வமரம் நெருப்பு அம்சம், இதில் உள்ள ரசாயனம் உடலில் உள்ள நச்சு பொருளை அழிக்கும் தன்மைகளை உடையது.

சிவ மந்திரம் சொல்லும்பொழுது உடல் சூடா கும் ஆன்மா விழித்து எழும்

இப்படி நடக்கும் பொழுது உடலை சீர் செய்ய வில்வம் இலை உதவி செய்யும்.

சிவ பெருமான் தொழிலே தவறான செயல் களை அழிப்பது தான்.

நடராஜ தத்துவமும் இதைத்தான் செய்கிறது. அவருடைய தியானம் அதற்கு சக்தி பெறும் செயல்.

கருவறையில் சொல்ல படும் மந்திரத்தால் வெப்பம் மிகும். இதனால் உடல் சீர் நிலை மாறும் இதை சரி செய்ய வில்வ இலையால் முடியும்.

ஆம் வில்வத்தில் உள்ள வெப்பம் பனி மலையில் உள்ள வெப்பம்.

சக்தி தேவி முழுமையாக நெருப்பு சிவ பெருமான் மறைமுக நெருப்பு, சக்தி தேவி வெளி நெருப்பு சிவ பெருமான் உள்ளுக்குள் நெருப்பு.

பனிக்கட்டிகளை கைகளில் வைத்து இருந் தாலும் உள்ளே வெப்பம் உண்டாகும் நெருப்பு கதிர்களை கைகளில் பிடித்து கொண் டால் வெளியே வெப்பம் உண்டாகும்.

## வில்வமாக மாறிய அசுரர்கள்

சித்தர்கள் வில்வ மரத்தை பற்றி சொல்லும் சிவ வழிபாடு செய்த அசுரர்கள் சைவர்களாக மாறி சிவகதி அடைந்து சதுரகிரி மலை தலத்தில் வில்வமாக மாறி பெருமானுக்கு சேவை செய்வதாய் சொல்கிறார்கள். இவர்களை வழி பாடு செய்து விட்டு தான் இலைகளை பறிக்க சொல்லி உள்ளார்கள்.

## உலர்ந்த வில்வம் கூட புனிதமானது

சில விதி முறைகள் வில்வ இலைகளைபறிக்க உண்டு. அமாவாசை, பௌவுர்ணமி, மாதப்பிறப்பு, திங்கட்கிழமை, அஷ்டமி, நவமி, சதுர்த்தி நாட்களில் வில்வம் இலைகளை பறிக்கக் கூடாது. முன் நாட்களில் பறித்து கொள்ள வேண்டும். வில்வ இலைகளை சுத்தம் செய்து எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

வில்வம் காய், பழத்தை யாகத்துக்கு பயன் படுத்தலாம். வில்வதளத்தை பறித்த பிறகு 6 மாதம் வரை வைத்து வீட்டில் பூஜை செய்யலாம். உலர்ந்த வில்வமும் புனிதமானது.

## ஒரு மண்டலம் வில்வ இலையை உண்டால் அற்புத பலன் கிடைக்கும்

108 வில்வமரத்தை நட்டு வைத்து அவைகளை வளர்த்தல் சிவ ஆசிகளை எளிமையாக பெற முடியும். ஒரு நாளைக்கு ஒரு இலை என்று 48 வது நாளில் 48 (எண்ணிக்கை ) இலைகளை உண்ண உடலில் உள்ள அக நோய்கள் நீங்கும் என்று அகத்திய பெருமான் சொல்கிறார்.

## வில்வத்தை நாடிய பெருமாள்

மிகுந்த குளிர் தன்மைகளை உடைய பெருமாளான நாராயணர் ஸ்ரீ ரெங்கத்தில் தண்ணீரின் நடுவில் படுத்து இருக்கும் பொழுது வெப்பம் தேவை என வில்வ மரத்தில் அடியில் படுத்து இருக்கிறார். ஆம் நமக்கு, நம் குலத்தை தழைக்க வைக்கும் வில்வமே என்றும் நமக்கு தல விருட்சம் என்று நம்மாழ்வார் சொல்கிறார்..

## லட்சுமி தேவியிடமிருந்து தோன்றிய வில்வமரம்

பாற்கடலில் இருந்து லட்சுமிதேவி தோன்றிய போது அவளது கரங்களில் இருந்து வில்வ மரம் தோன்றியதாக வராக புராணத்தில்




கூறப்பட்டுள்ளது. எனவே வில்வ மரத்தை மகாலட்சுமியின் வடிவமாக கருதுகிறார்கள். இதனால் வில்வ மரத்தை வழிபட்டால், ஈசனின் கருணை கிடைப்பதோடு, லட்சுமி தேவியின் பரிபூரணமான அருளையும் பெறலாம். வில்வ மரத்தில் மட்டுமின்றி வில்வ இலைகளிலும் மகா லட்சுமி வாசம் செய்வதால், வில்வ இலைகளுக்கு தனிச்சிறப்பு உண்டு.

## ஒரு வில்வ இலையில் சிவனை மகிழ்விக்கலாம்

வில்வங்களில் மகாவில்வம், கொடி வில்வம், சித்த வில்வம், கற்பூர வில்வம் உள்பட 21 முக்கிய வகைகள் உள்ளன. வில்வத்துக்கு கூவிளம், கூவிளை என்பவை உள்பட பல பெயர்களும் உண்டு. வில்வ இலைகள் மூன்று தளம், ஐந்து தளம், ஏழு தளங்களாக இருப்பதை காணலாம். பெரும்பாலும் மூன்று இலைகளுடன் இருப்பதை




வில்வ தளம் என்பார்கள். சிவனை மகிழ்ச்சிப்படுத்த ஒரே ஒரு வில்வதளம் போதும் என்பார்கள். மூன்று இலைகள் கொண்ட வில்வதளம் சிவபெருமானின் மூன்று கண்களைக் குறிப்பதாக சொல்வார்கள்.

## மூன்று சக்தி கொண்ட வில்வம்

வில்வதளத்தில் இச்சா சக்தி, க்ரியாசக்தி, ஞான சக்தி ஆகிய மூன்று சக்திகளும் அதி தேவதைகளாக இருக்கிறார்கள். வில்வத்தில் ஐந்து தளம், ஏழு தளங்களுடன் இருப்பவை அரிதானதாக கருதப்படுகின்றன. இவற்றை மகா வில்வம், அகண்ட வில்வம் என்று உயர்வாக சொல்வார்கள். வில்வ மரங்கள் கிளை, கிளையாக இடையிடையே முட்களுடன் காணப்படும். இதில் வில்வ தளங்களை சிவன் என்றும், முட்களை சக்தி என்றும், கிளைகளை வேதங்கள் என்றும் வேரை முக்கோடி தேவர்கள் என்றும் நம் முன்னோர்கள் போற்றி வழிபட்டுள்ளனர்.

## தோஷங்களை போக்கும் வில்வம்

சிவபூஜை சமயத்தில் வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தீய சக்திகள் விலகும். தோஷங்கள் ஓடோடி விடும் என்பார்கள்.

## ஒரு லட்சம் சொர்ணபூக்களுக்கு சமமானது

ஒரு வில்வ தளத்தை சிவனுக்கு அர்ப்பணம் செய்தால், மூன்று ஜென்ம பாவங்கள் விலகும் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு வில்வ தளம் என்பது லட்சம் சொர்ண பூக்களுக்கு சமமானது. சிவனுக்கு வில்வ இலைகள் மிகவும் பிடிக்கும் என்பதால் சிலர் வில்வ இலைகளைக் கொண்டு சிவனுக்கு லட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை செய்வார்கள். அத்தகையவர்களுக்கு சிவபெருமானின் அருள் மிக, மிக எளிதாக கிடைக்கும். அதாவது வில்வத்தின் துணை கொண்டு சிவபெருமானை எளிதாக நாம் அணுக முடியும்.

## சிவனுக்கு ஏன் பிடித்தது?

சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை. இது கடும் வெப்பத்தைக் கொடுக்கக் கூடியது. இதனால் ஈசனை சாந்தப்படுத்தவும், குளிர்ச்சிப்படுத்தவும் முனிவர்கள், ரிஷிகள் வில்வ தளத்தை பயன்படுத்தினார்கள். வில்வம் குளிர்ச்சியூட்டும் குணமுடையது. வில்வதளங்களால் ஈசன் குளிர்ச்சியை பெற்றார். எனவேதான் வில்வம், சிவபெருமானுக்கு பிடித்த மானதாக மாறியது. வில்வ இலைகளுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு.

## சக்திகளை தக்க வைக்கு வில்வ இலை

வில்வ இலையை உண்டால் நமது உடலில் இருந்து அதிக சக்திகள் வெளியாகாது. ஜீரணம் செய்த சக்தி கூட சேமிப்பாகி விடும். இதன் மூலம் சிவத்துக்குள் அதிக சக்தியை சேமிக்க செய்யும் ஆற்றல் வில்வ தளங்களுக்கு இருப்பதை நம் முன்னோர்கள் கண்டு பிடித்தனர். எனவே சிவார்ச்சனைக்கு மற்ற மலர்கள், இலைகளை விட வில்வ தளங்களை பயன்படுத்தினார்கள். வில்வம் இத்தகைய முக்கியத்துவத்தை பெற்றதால் "சிவமூலிகைகளின் சிகரம்" என்றழைக் கப்படுகிறது.

## வில்வத்தின் அதிர்வலைகள்

மூன்று இலைகளைக்கொண்ட வில்வ தளத்தை சிலர் தனி தனியாக கிள்ளி பிரித்து

விடுவதுண்டு. அப்படி செய்யக்கூடாது.மூன்று இலை கொண்ட வில்வ தளத்தை அப்படியே அர்ச்சனை மற்றும் வழிபாட்டுக்கு பயன்படுத்த வேண்டும். அப்படி வில்வதளத்தை பயன்படுத் தினால்தான், அதில் சேமிக்கப்படும் அதிர்வலை கள் நமக்கு கிடைக்கும்.

## வில்வ இலை அதிர்வலையை உணரும் வழிமுறை

ஆயலங்களில் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படும் மூல மூர்த்தியானது அஷ்ட பந்தனம், ராஜகோபுரம், கும்பாபிஷேகம் மூலம் எப்போதும் அதிர்வலைகளுடன் இருக்கும். பழமையான சிவாலயங்களில் ஈசனிடம் இருந்த வெளிப்படும் அதிர்வு அதிகம் இருப்பதை பலரும் அனுபவப்பூர்வமாக அறிவார்கள்.

அத்தகைய அதிர்வு கொண்ட ஆலயங்களில், லிங்கத்தின் மீது போடப்படும் வில்வ தளங்கள், அந்த அதிர்வுகளை தம்முள் கிரகித்து வைத்துக் கொள்ளும். பூஜை முடிந்து அர்ச்சகர் அந்த வில்வ தளத்தை நம்மிடம் தரும்போது பக்தியுடன் வாங்கி சட்டை பை அல்லது கைப்பைக்குள் வைத்துப் பாருங்கள். வில்வ இலைகளில் தேங்கியுள்ள ஈசனின் அதிர்வலைகள் நம் உடலுக்குள் ஊடுருவும். அந்த அதிர்வலைகள் அபார சக்தி கொண்டவை. அது நமது உடலிலும் உள்ளத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடும். வில்வ தளங்களுக்கு மட்டுமே இப்படி மூலவர் சிலையில் இருந்து நம்மிடம் அதிர்வலைகளை கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மோட்சம் தரும் வில்வ இலைகள்

வில்வத்தின் சிறப்பு பற்றி புராணங்களில் பல கதைகள் உள்ளன. ஒரு தடவை காட்டுக்கு வேட்டையாட சென்ற வேடனை புலி துரத்தியது. வில்வ மரத்தின் மீது ஏறியவேடன் தூக்கம் வராமல் இருக்க, இலைகளை பறித்து போட்டுக் கொண்டே இருந்தான். அது மரத்தடியில் இருந்த லிங்கம் மீது விழுந்தது. விடிந்த பிறகுதான் அவனுக்கு தான் ஏறியது வில்வ மரம் என்று தெரிந்தது. அன்றைய இரவு சிவராத்திரியாகவும் இருந்தது. வேடன் தன்னை அறியாமல் லிங்கம் மீது வில்வ தளங்களை போட்ட காரணத்தால் அவனுக்கு



அழகுராஜா

மோட்சம் கிடைத்தது. மகா சிவராத்திரி நாளில் வில்வாஷ்டகம் பாராயணம் செய்து வில்வம் சார்த்தி, சிவபெருமானை வழிபட்டால், ஏழு ஜென்ம பாவம் விலகும் என்பது ஐதீகம்.

## வில்வ மரமாக மாறிய வேதங்கள்

ஊழிக்காலத்தில் அனைத்தும் அழியும் என்று உணர்ந்த வேதங்கள் தாங்கள் அழியாதிருக்க என்ன வழி என்று ஈசனிடம் கேட்க, ஈசனும் திருவைகாவூர் தலத்தில் வில்வ மரத்தின் வடி வில் நின்று தவம் செய்யுமாறு அருளினார். அதன்படி வேதங்களும் வில்வமரங்களாக தவம் இயற்றியதால் திருவைகாவூர் என்ற தலம் வில்வராண்யம் என்று சிறப்புப் பெற்றது. இத் தகைய சிறப்புடைய வில்வ மரம் திருவையாறு, திருவெறும்பூர், ராமேஸ்வரம் உள்பட 30க்கும் மேற்பட்ட ஆலயங்களில் தல விருட்சமாகஉள்ளது.

## வீட்டில் வில்வமரம் வளர்ப்பதால் ஏற்படும் பலன்கள்

வீடுகளிலும் வில்வ மரம் வளர்க்கலாம். வீட்டில் வில்வ மரம் வளர்த்தால் அஸ்வ மேத யாகம் செய்த பலன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும். 108 சிவாலயங்களை தரிசனம் செய்த பலனும், புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் கிடைக்கும். வில்வ மரம் வளர்ப்பவர்களை ஏழரை சனி நெருங்காது. வில்வ மரத்தை தினமும் பூஜித்தால் செல்வம் பெருகும். கடன் தொல்லைகள் மறையும். வெள்ளிக்கிழமைகளில் வில்வ மரத்தின் கீழ் அமர்ந்து லட்சுமி துதி சொல்லி நைவேத்தியம் படைத்து வழிபட்டால் அளவிட முடியாத அளவுக்கு அற்புதங்கள் நடக்கும். வில்வ மரத்துக்கு ஸ்ரீவிருட்சம் என்றும், வில்வ பழத்துக்கு ஸ்ரீபழம் என்றும் பெயருண்டு.

## சர்வரோக நிவாரணி

எனவே வில்வ மரத்தை பார்த்தும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். மருத்துவ ரீதியாகவும் நிறைய பலன்களை வில்வம் தருகிறது. தினமும் வில்வ மரத்தடியில் தியானம் செய்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். ஊளைச் சதை குறையும். வில்வ இலை பொடியை சாப்பிட்டால் கண்

பார்வை தெளிவாகும். பல் வலி நீங்கும். சளி, இருமல், சைனசுக்கு வில்வ இலை பொடி சிறந்த மருந்தாகும்.

கொழுப்பு கட்டுப்படும். ரத்த அழுத்த பிரச்சினை தீரும். சர்க்கரை நோய் குணமாகும். அல்சர் பிரச்சினை வரவே வராது. ஜீரணக்கோளாறுகள் சரியாகும். உடல் குளிர்ச்சி பெறும். இதனால் தோல் சம்பந் தபட்ட எந்த வியாதியும் வராது. இன்னும் ஏராளமான மருத்துவ பலன் தரும் வில்வ தளத்தை பறிக்கும் போது பயபக்தியுடன் பறிக்க வேண்டும்.

## புராணம் கூறும் பலன்கள்

நாம் வீட்டில் வில்வமரம் நாட்டி வளர்ப்பதினால் பின்வரும் பல்வேறு நன்மைகள் அடைய முடியும் என சிவ மஹா புராணம் சொல்கிறது. இந்தியாவில் வில்வ இலையை வீட்டில் வளர்ப்பவர்களைக் காட்டிலும், இலங்கை சிங்களர்கள் வீடுகளில் யோகம் தரும் மரமாக வில்வ மரம் நட்டு மிகுந்த கவனமுடன் பராமரிக்கின்றனர்.

வில்வ மரத்தை நட்டு பராமரிப்பதனால்,

1. அஸ்வமேதயாகம் செய்த பலன் ஏற்படும்.
2. ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும்.
3. கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும்.
4. 108 சிவாலயங்களை வலம் வந்து தரிசித்த பலாபலன் உண்டாகும்.
5. இம் மரத்தின் காற்றை நுகர்ந்தாலோ அல்லது அதன் நிழல் எமது சரீரத்தில் பட்டாலோ அதீத சக்தி கிடைக்கும்.
6. சிவனிற்கு பிரியமான வில்வார்ச்சினை மூலம் சிவனின் திருவருட் கடாச்சத்தைப் பெறமுடியும்.
7. வில்வமரத்தை முறைப்படி விரதமிருந்து பூஜிப்பவர்க்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும்.
8. வீட்டில் துளசி மாடம் போல் வில்வமரம் வைத்து வளர்ப்பவரிற்கு ஒருபோதும் நரக மில்லை.
9. ஒரு வில்வதளம் கொண்டு இறைவனை அர்ச்சிப்பது இலட்சம் ஸ்வர்ணபுஸ்வங்களால் இறைவனை அர்ச்சிப்பதற்கு சமன்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# எதிர்மறை விமர்சனத்தை எளிதாக தவிர்க்கலாம்



யார் எதைச் சொன்னாலும் மனதளவில் வருத்தப்படுவதும், நடைபெற்ற ஏதோ ஒரு விஷயத்தை மனதில் போட்டு குழம்பிக் கொண்டிருப்பதாலும் மனிதர்கள் தங்களது மகிழ்ச்சி, இன்பங்களை தொலைத்து நிம்மதிக்காக அலைகின்றோம்.

இதற்கு தீர்வாக ஒரு சிறு கதையை பார்ப்போம்.

ஒரு இந்திய சன்னியாசியை வெள்ளையர்கள் கடுமையாககேலி செய்தார்கள். அவரோ அதனை கண்டுக் கொள்ளவே இல்லை.அவர்கள் மேன் மேலும் கேலிசெய்து சன்னியாசிக்கு கோபத்தை தூண்ட முயன்றனர்.

சன்னியாசி அசரவே இல்லை. பொறுமை இழந்த வெள்ளையர்கள் உனக்கு சொரணையே இல்லையா, உன்னை இவ்வளவு திட்டு திட்டி னோம் நீ உன்பாட்டுக்கு இருக்கி றாயே என்று கேட்டனர்.

அதற்கு அந்த சன்னியாசி தன் கையில் இருந்த பிச்சைப் பாத்திரத்தை எடுத்து இதை வாங்கி கொள்ளுங்கள் என்றார்.

ஆனால் வெள்ளையர்கள் அதை வாங்க மறுத்து விட்டனர்.

சிரித்தப்படி சன்னியாசிசொன் னார். நான் கொடுத்த பொருளை நீங்கள் வாங்காததால் அது இன்ன மும் என்னிடம் தான் இருக்கிறது.

அதுப்போல் உங்கள் வசவு சொற்களை நானும் வாங்கவில்லை அது உங்களிடமே இருக்கிறது என்றார். நாம் அனுமதிக்காத வரை எவரின் எந்த எதிர்மறை விமர்சனமும் நம்மை ஏதுவும் செய்ய முடியாது.

www.aanmeegamalar.com

# சாம வேதத்தின் முக்கிய நோக்கம்

**கடவுள் உருவாக்கிய மதம்**

இந்திரனுடன் வருணன், மித்திரன், ஆரியமன், சரஸ்வதி, நகுஷன் ஆகிய தெய்வங்களை துதிக்கும் விதத்தில் அமைந்துள்ளபாடலை பார்ப்போம். இதில் ஒரு முக்கியமான விஷயத்தை மனதில் கொள்ள வேண்டும். சாமவேதத்தில் பாடல்கள் எல்லாமே மிகப்பெரியது. குறைந்த பட்சம் பத்து பகுதிகளுக்கு மேல் உள்ளவையாகும். அதே நேரம் ஒரு பாடலை ஒரே ஒரு ரிஷிகள் சேர்ந்து ஒரு பாடலை உருவாக்கியும் இருக்கிறார்கள். இனி பாடல் வரிகளுக்குள் நமது பயணத்தை தொடருவோம்.

வெற்றிகளை கொடுக்கும் தெய்வங்களை புகழும் பாடல்கள் நம்மிடமிருந்து பெருகட்டும். அந்தப் பாடல்களின் இசை நாதம் எட்டுதிக்குகளிலும் நிரம்பட்டும் ஆகாயத்தில் அந்த நாத அலை மேகக்கூட்டங்கள் போல் பரவட்டும். கீதங்களை பாடி சோமரசத்தை எல்லா தேவதைகளுக்கு கொடுத்து மகிழ்வோம். சோம பானம் பெற எந்த தெய்வம் தான் வரமறுக்கும். சோமச் செடிகளின் வேர்களில் ஆயிரமாயிரம் மதுக்குடங்கள்தொங்குகின்றன. அதன் சுவை மனிதர்களின் மனங்களை மட்டுமல்ல தெய்வங்களின் ஆத்மாவையும் சிலிர்க்க செய்யும் இந்த சுவையை பகிர்ந்து கொள்வதினால் தேவர்களும் மனிதர்களும் வேறுபாடில்லாமல் ஒரே மாதிரியானவர்களால் மாறிவிடுகிறார்கள்.

தெய்வங்களை நமது விருந்தாளிகள். நாம் விருந்தளிப்பவர்கள். நமக்கு செல்வங்களையும் வெற்றிகளையும் தருகின்ற அவர்களுக்கு சோம ரசத்தால் ஆராதனை நிகழ்த்துவோம்.





யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

அனைத்து கலைகளிலும்ஆத்மா வாய் இருக்கின்ற கலைமகளை வழிபடுவோம். அவளே நம்மை இருட்டி லிருந்து மீட்டெடுக்கும் அன்னை. மனிதத்தாய் பத்து மாதம் மட்டுமே நம்மை சுமக்கிறாள்.

கலைகளின் தலைவியான இந்த தெய்வத்தாய் நம்மை காலமெல்லாம் சுமக்கிறாள். வழிதெரியாமல்தவிக்கும் நம்மை விரல் பிடித்து அழைத்து சென்று உரிய இலக்கை காட்டுகிறாள். இவளின் ஞான வெளிச்சம் தான் உலகத்தை இருள் அண்டாமல் காப் பாற்றுகிறது. இவள் தரும் அறிவுதான் ஆற்றலின் ஊற்றுக் கண்களாக இருக்கிறது. குதிரைகளையும் தேர்களையும் பெறலாம். கொட்டகை நிறைய பசுக்களையும் பெறலாம். இந்த செல்வங்களை ஆற்றலினால் மட்டும் காப்பாற்ற முடியுமா. அறிவு இல்லாத ஆற்றல் நம்மை மட்டுமல்ல செல்வத் தையும் அழித்துவிடுகிறது.

இந்திரன் எதனால் மகிழ்ச்சி அடைகிறான். நமது சடங்குகள் தான் அவனை சந்தோஷம்அடைய செய்கிறது. நமது சடங்குகளோ நாகுஷத்தை அடிப்படையாகக் கொண்டது. நாகுஷவிதிமுறைச் சடங்குகள் தான் இந்திரனை மகிழ்விக்கும் தன்மை கொண்டதாகும். இந்திரன் எல்லையில்லாத செல்வங்களின் சொந்தக்காரன் ஆவான்.

பகைகள் அனைத்தையும் அடக்கி ஆளும் வீரனும் ஆவான். நமது ஆயுதங்களுக்கும் ஆற்றல்களுக்கும் அவனே மூலம். அதனால் நம்மிடமிருந்து சோமரசத்தை பெற்று வெற்றி என்னும் ஆனந்தக் கடலை நமக்கு தருகிறான்.

சாம வேதத்தின் பல பகுதிகள் சோம ரசத் தின் பெருமைகளை பேசுவதாகவே இருக் கிறது. அதனால் இதை சாம வேதம் என்று அழைப் பதை விட சோம வேதம் என்று அழைத்தால் பொருத்த மாக இருக்கும். இனி இந்த வேதத்தின் இறுதி பகுதியை பார்ப்போம்.

பிரகஸ்பதி என்ற பெயர் இந்திர னுக்கு உரியது. இப்போது இவன் வெள்ளை குதிரைகள் பூட்டிய அழகிய தேரில் வருகிறான். கம்பீரமான அவனது குதி ரைகள் காற்றை விடவும் வேகமாக செல்லக் கூடிய தாகும். இததகைய குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்த படியே பல போர்களங்களை அசுரர்களின் அழிவுக்களமாக ஆக்கி வெற்றி வாகை சூடி இருக்கிறான். வெற்றி ஒன்று தான் இந்திரனின் பிரகடனப்படுத்தப்படும் செய்தி ஆகும். இத்தகைய வெற்றி யின் அரசனான இந்திரன் நமது தேர் களை காக்கட்டும்.



இந்திரன் தனது ஆயுதத்தால் மேகங்களை பிளக்கிறான். அவற்றில் அடங்கி இருக்கும் நீரை பூமியின் மேல் மழையாக பொழிய செய்கிறான். இந்திரனின் கோபம் மிகவும் பயங் கரமானது.

எந்த ஆயுதமும் அவனை வெல் லாது. அவனது இருக்கையிலிருந்து அவனை அசைக்கும் சக்தி எவருக் கும் இல்லை. எல்லா தேவர்களும் அவனிடத்தில் அடங்கி நடப்பவர்களே ஆவார்கள். அசுரர்களும் அவன் முன்னால் சக்தியற்று போய் விடுகிறார்கள். இந்திரன் வரும் போது அனைத்து தேவர்களும் வணங்கி வரவேற்பார்கள் அவனை. அவனது படை முன்னேறும் போது சடங்குகளின் அதிதேவதை யான சோமன் அவைகளை வழி நடத்துகிறான்.

சண்டமாருதமும், மந்த மாருதமும்அப்படியே செய்கின்றன. இந்திரனை எவரும் வெல்ல முடியாது என்பது போலவே அவனது படைகளையும் யாரும் வெல்ல முடியாது. ஏனென்றால் அவன் படைவீரர்கள் அனைவருமே சோமபானத்தை சுவையுடன் பருகிய தேவர்கள் ஆவார்கள். சோம பானம் அருந்துவதினால் உடலிலுள்ள எல்லா உறுப்புகளும் புதிய பலத்தை பெறுகின்றன. கவசத்தால் சூழப்பட்டு ஆயுதங்களால் காக்கப் பட்டால்எந்த உணர்வு தலைக்கேருமோ அதே உணர்வு சோமபானம் அருந்துவதால் ஏற்படுகிறது. அமிர்தத்தால் ஏற்படும் அழிவற்றத் தன்மை சோமபானத்தால் தற்காலிகமாக ஏற்படுகிறது.

தேவர்களின் ஆற்றல்களால் எங்கள் பாது காப்பு பலபடுத்தப்படட்டும்.

நஞ்சு நிறைந்த தலையை இழந்த நாகப்பாம்பைபோல் எங்கள் விரோதிகள் கண் களை பறிகொடுத்து அழியட்டும். எங்களது

பகைவர்களும் அவர்களது படைகளும் அக்னி தேவனின் கொடிய பார்வை பட்டு வெறும் சாம்பலாக மாறட்டும். நாங்கள் வெறுக்கும் பகைவர்களும் எங்களை வெறுக்கும் பகைவர்களும் தேவர்களால் கொல்லப்படட்டும். அத்த




கைய தேவர்களை பாடி பரவும் பாடல்களின் ஒசை நாலாபுறமும் சூழ்ந்து ஒரு கவசம் போல் எங்களை பாதுகாக்கட்டும்.

இந்திரனே! உனது பலம் ஆயிரம் சிங்கங் களின் வீரியத்திற்கு ஒப்பாகும். உனது பாதச் சுவடுகள் வனாந்திரங்களிலும் மலைகளின் சிகரங்களிலும் படிந்திருக்கிறது. சிகரங்களையும் சமுத்திரங்களையும் பாதங்களால் நசுக்கி மார்தட்டி நீ அறை கூவல் செய்தால் திசைகளெல்லாம் நடுக் கம் அடையும். உயிர்களெல்லாம் கதிகலங்கும் உனது குரலுக்கு அஞ்சாத உயிர்கள் எதுவுமே இல்லை. உன்னை மனநிறைவு கொள்ளச்செய்யும் யாகங்களையும் சடங்குகளையும் நாங்கள் செய்வதி னால் எங்களை தொடர்ந்து பாதுகாப்பாயாக.

வாழ்க்கையை ரசமுடையதாக்கும் பகுதிகள் பல சாம வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வாழ்வை கடந்து செல்ல உதவி செய்யும் தத்து வங்கள் மிகக் குறைவாகவே இந்த வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வயிற்று பிழைப்புக்காகவும் தொழில்களுக்காகவும் நாலாபுறமும் நாடோடிகள் போலும் சுற்றி திரிந்த வேதகால மக்களுக்கு போதிய ஓய்வும் களியாட்டமும் இருந்திருப்பதற்கான ஆதாரங்கள் இந்த வேதத்தில் தெளிவாக காண முடிகிறது.

சாதாரணமான உணவுகளினால் மனிதர்கள் எப்போதுமே திருப்தி அடைவது கிடையாது. உண வின் சுவைகளையும் தாண்டி வேறு சிலவற்றையும் மனித மனம் நாடுகிறது. ஏனென்றால் மாற்றும் சுவையை அனுபவிக்கும் பொழுது இனம் புரியாத உல்லாசம் தனக்கு ஏற்படுவதாக அவன் நம்புகிறான். பாதுகாப்பற்ற நிலையிலும் பயத்துடனும் வாழ்ந்த ஆதிகால மனிதன் அவற்றை மறைப்பதற்காகவும் மறப்பதற்காகவும் மயக்கம் தருகின்ற பானங்களை நாடி இருக்கிறான். அந்த நாட்டத்தின் கண்டுபிடிப்பே சோம பானம் ஆகும். இந்த பானம் இப்போது எங்கும் தயாரிக்கப்படவில்லை. காரணம் சோமச் செடிகள் இன்று மனிதர்களுக்கு கிடைக்கவில்லை. அவைகள் முற்றிலுமாக அழிந்து போய் இருக்கலாம் அழிக்கப்பட்டு இருக்கலாம் அல்லது இது தான் சோமச் செடி என்று அடையாளம் தெரியாமல் இருக்கலாம்.

எது எப்படி இருந்தாலும் போதைக்கு மயங்கும் மனித சுபாவம் ஆரம்ப நாட்களில் புனிதத் தன்மையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இணைத்ததற்கு காரணம் தீயதை நல்லதாக காட்டும் சதி உணர்வா அல்லது அவர்களின் இயற்கையே அப்படித்தானா என்பது இன்றைய நிலை யில் அமர்ந்து கொண்டு நம்மால் சிந்தித்து முடிவு செய்து விடமுடியாது. இருப்பினும் சாம வேதத் தின் இந்த கருத்துகளை பிரதானப்படுத்த சில குழுவினர் வைதீகச் சடங்குகள் அனைத்துமே போதை களியாட்டங்கள் தான் என்று பிரச்சாரம் செய்வதற்கு தக்க பதிலடியை நமமால் சரிவர கொடுக்க இயலவில்லை.

அதற்காக வைதீகச் சடங்குகளை கொச்சை படுத்துவதை பொருத்துக் கொள்ள முடியாது. காரணம் எந்த இலக்கியமும் அது தோன்றிய காலத்தின் பண்பாடுகளையும் பழக்கங்களையும் புறந்தள்ளாமல் தன்னகத்தே கொண்டு பல புதிய கருத்துகளை உருவாக்குவதே ஆகும். வேத இலக்கியமும் இதற்கு விதி விலக்காக முடியாது.அதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது சோமபானம் என்ற மதுவகை ஒடி ஆடி உழைத்த வேதகால மக்களின் உடல் வலியை போக்கி உற்சாகத்தை கொடுத்திருப்பதினால் வேதத்தில் அது புகழப்பட்டிருக்கலாம். அதற்காக இன்று கூட வைதீகச் சடங்குகள் களியாட்டமாக அமைந் திருக்கிறது என்று வாதிடுவது முழுமையான அறியாமையாகும் அல்லது முரட்டுத் தனமான மூடச் சிந்தனை ஆகும்.

சாம வேதம் அக்கால மக்களின் இன்பநுகர்வு எப்படி இருந்தது என்பதை நமக்கு தெளிவாகக் காட்டு கிறது. உல்லாசம் இல்லாத எந்த வகையான வாழ்வும் மனிதனுக்கு சுமையாகி விடும். உல்லாசங்களை அனுபவித்தால் தான் மனதில் எழும்பும் உணர்ச்சிகள் அடங்கும். அனுபவிக்காமல் உணர்வுகளை அடக்கினால் அது பூதாகரமாகவேறோரு வடிவத்தில் வெளிபட்டு மனிதனை அழிவு பாதைக்கு அழைத்துச் சென்று விடும். அனுபவித்து முடிந்த பிறகு மனம் அமைதி அடைந்து மோட்சம் என்ற அடுத்த படியை நாடுகிறது. இதை தெளிவாகக் காட்டுவதே சாம வேதத்தின் முக்கிய நோக்கமாகும். இதை மனதில் வைத்துக் கொண்டு அடுத்த வேதமான அதர்வணத்தை பற்றி சிந்தித்தால் இந்து மதத்தின் உண்மை நிலை நன்கு தெளிவாகும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434

# இறைவன் உங்களிடமிருந்து ஒளிந்திருக்கவில்லை

ப்ரிய குருதேவர் மிகுந்த அன்புடன் அருளுகிறார்: “ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கு ஒருமுகப்படக்கூடிய ஆற்றல் அத்தியவசியமானது; ஒருமுகப்படுதலின்றி இறைவனை நீங்கள் ஒருபோதும் காணமுடியாது. உங்கள் உணர்வு நிலையிலிருந்து எல்லா ஓசைகளையும் இதர லௌகீக கவனச் சிதறல்களையும் எவ்வாறு வெளியேற்றுவது என்பதை கற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய ஒருமுகப்படுதல் கைகூடிய மறுகணமே இறைவன் அங்கே உள்ளான்.




அவன் உங்களிடமிருந்து ஒளிந்திருக்கவில்லை, நீங்கள்தான் அவனிடமிருந்து ஒளிந்திருக்கிறீர்கள். ஆழ்ந்த தியானத்தின்போது, ஏதேனும் உட்புற ஒளியை (இறைவனின் ஜோதி அல்லது ஆத்மஞானக்கண்) நீங்கள் கண்டால், அதைப் பற்றிக்கொள்ளவும், மேலும் நீங்கள் அதற்குள் உள்ளதாகவும் அதனுடன் ஒன்றிணைந்துள்ளதாகவும் உணர்வதற்கு முயலுங்கள். அங்கேதான் இறைவன் உள்ளான். இறைவனின் அந்த ஒளிதான் நீங்கள் என்பதை அறிந்துகொள்ள முயலுங்கள்.”

“ஒருமுகப்படுதலின் பொழுது, எவ்வளவு அதிகமாக நீங்கள் அமைதியை உணர்கின்றீர்களோ, எவ்வளவு அதிக நேரம் நீங்கள் ஒருமுகப்படுகிறீர் களோ, அவ்வளவ அதிகம் நீங்கள் இறைவனில் ஆழ்ந்து செல்வீர்கள் ஆன்மீக உண்மைகளைப்பற்றிய நூல்களை படிப்பதற்கான நேரத்தைத் தியானத்தில் செலவழித்தால், மனரீதியாவும் ஆத்ம ரீதியாகவும் எத்தனையோ சிறந்த முன்னேற்றம் அடைவீர்கள். தூக்கத்தைக் குறைத்து தியானத்திற்கு அதிக நேரத்தைக் கொடுங்கள். இதன் மூலம் நீங்கள் அனுபவிக்கும் ஓய்வானது, நித்திரையைவிட நூறு மடங்கு புத்துணர்ச்சியை அளிக்கக்கூடியது.”

மேலும் அவர் கூறுகிறார்: “எல்லா சப்தங்களையும் உங்களுடைய உணர்விலிருந்து துண்டித்தாலொழிய இறைவனை நீங்கள் அடையமுடியாது. அதனால்தான் மகான்கள் குகைகள்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்







114
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மற்றும் கானகங்களில் தனிமையை நாடினர். நான் உங்களுக்குக் கொடுத்துள்ள ஒருமுகப்படுதல் மற்றும் தியான முறைகளை பயிற்சி செய்வதன் மூலம் அகத்துள் உள்ள மௌனத்திற்குள் மீண்டும் மீண்டும் மூழ்குங்கள். அப்பொழுது பேரமைதியையும் ஆனந்தத்தையும் நீங்கள் காண்பீர்கள். பகவத் கீதை கூறுகின்றது, “என்றும் நம்பிக்கையூட்டும் ஆசைகளிலிருந்தும் உடைமைகளுக்காகிய அடக்க முடியாத ஆசைகளிலிருந்தும் விடுதலையுற்று, இதயமானது (உணர்ச்சி அலைகள்) ஆன்மாவால் (யோக ஒரு முகப்படுதல் மூலம்) கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, ஓர் அமைதியான இடத்தில் தனிமையாக விலகி , இருந்து, யோகியானவன் ஆத்மனுடன் ஒன்றிணைய இடைவிடாமல் முயல வேண்டும்.” (பகவத் கைத அத் 6 ஸ்லோகம் 10)

“எல்லா தேவாலயங்களிலும் கோவில்களிலும் ஆழ்ந்த தியானத்தின் அமைதி அதிகமாக சாதனை செய்யப்படவேண்டும். ஒவ்வொருவரும் குறைவாகப் பேச வேண்டும். இந்தியாவில் எனது ஆசிரமப் பயிற்சியின்போது, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் எப்பொழுதாவதுதான் எங்களுக்கு உரை நிகழ்த்துவார். பெரும்பாலான சமயங்களில், நாங்கள் அவரைச் சூழ்ந்து எவ்வித பேச்சும் இன்றி, அகத்துள் ஒருமுகப்பட்டு அமர்ந்திருப்போம், நாங்கள் ஒரு சிறிது அசைந்தாலும் அவர் எங்களைக் கண்டிப்பார். ஓர் உண்மையான குருவானவர் நூல் அறிவைவிட அதிகஞானம் பெற்றுள்ளார். அத்துடன் ஆன்மீக வாழ்வில் இப்படிப்பட்ட ஒரு குருவிடமிருந்து இறைவனைத் தெரிந்தவரும், வெறுமனே நூல்களை படித்ததிலிருந்து அல்லாமல் உண்மையைத்தான் அனுபவித்துள்ளதால் தனக்குத் தெரியும் என்பதை தெரிந்தவருமானவரிடமிருந்து ஞானத்தைக் கற்றுக் கொள்வது அவசியம் “.

இறைவனைக் காண்பதற்கான இன்றியமையாத ஒரு தேவைபற்றி கூறுகிறார் குருதேவர்: ஒருமுகப்படுதலின்றி இறைவனைக் காண முடியாது. அதற்கு நாம் அயராது உழைக்கவேண்டும் என்றும் கூறுகிறார். அதற்கான ‘உழைப்பே பிழைப்பு’ என்ற ஒரு கதையை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஒரு சின்னக் குடும்பம் தந்தை, தாய், மகன் ஆகிய மூவர் மட்டுமே அங்கே இருந்தனர். ‘தன் மகன் இளைஞனாக இருந்தும் பொறுப்பு இல்லாமல் சோம்பேறியாக இருக்கிறானே’ என்று வருந்தினார் தந்தை. ‘எப்படியும் அவனைத் திருத்த வேண்டும்’ என்று நினைத்தார் அவர். அவனை அழைத்த அவர் “நீயே உழைத்து இரண்டு ரூபாய் பணம் ஈட்டி வர வேண்டும். அப்பொழுதுதான் இந்த வீட்டில் சாப்பிடலாம். இல்லாவிட்டால் பட்டினிதான் கிடக்க வேண்டும். என்னிடம் அன்பையோ இரக்கத்தயோ எதிர்பார்க்காதே” என்று கண்டிப்பாகச் சொன்னார். வேறு வழியில்லாத அவன் அன்று மாலை தன் நண்பன் ஒருவனிடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வீடு வந்தான். தந்தையிடம் அதைத் தந்து “இது நானே உழைத்த பணம்” என்றான்.

அந்த ரூபாய்த் தாளை இரண்டு பக்கமும் பார்த்த அவர் “இது நீ சம்பாதித்த பணம் அல்ல. என்னை ஏமாற்ற முயற்சிக்காதே” என்று சொல்லி அந்தப் பணத்தை அடுப்பில் போட்டார். அது எரிந்து சாம்பலானது. மறுநாளும் உழைக்க விரும்பாத அவன் தன் மாமாவிடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கித் திரும்பினான். அதையும் அவன் தந்தை வழக்கம் போல் அடுப்பில் தூக்கி எறிந்தார். அடுத்த நாள் அத்தையிடம் வாங்கிய பணத்திற்கும் அதே கதிதான் நேர்ந்தது. வேறு வழி காணாத அவன் நான்காம் நாள் கடுமையாக உழைத்தான். கிடைத்த இரண்டு

www.aanmeegamalar.com

ரூபாயுடன் மகிழ்ச்சியாக வீடு திரும்பினான். “இது உண்மையில் நானே முயன்று சம்பாதித்தது” என்று சொல்லித் தந்தையிடம் தந்தான். ஆனால் அவரோ வழக்கம்போல் “இதுவும் நீ ஈட்டிய பணம் அல்ல. என்னை ஏமாற்ற முயற்சிக்காதே” என்று சொல்லி அந்தப் பணத்தை அடுப்பில் போட்டார். அவ்வளவுதான். அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அடுப்பின் அருகில் அந்தப் பணத்தில் தீப்பிடிப்பதற்குள் கையைச் சுட்டுக் கொண்டு அதை எடுத்தான். இதைப் பார்த்த தந்தை “மகனே! இது நீ உழைத்து சம்பாதித்த பணம்தான். அதனால்தான் அந்தப் பணத்தை எரிய விடாமல் காப்பாற்றினாய். உனக்கு இப்போதுதான் உழைப்பின் அருமையும் பணத்தின் மதிப்பும் தெரிய வந்துள்ளது. இனி உன்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லை,” என்றார்.



குருப்ரியா

இந்தக் கதை ஒரு நல்ல பாடத்தைக் கற்றுத் தருகிறது. அனைவரும் நன்றாக உழைக்கவேண்டும்; யாரும் சோம்பேறியாக இருக்கக் கூடாது என்று குருதேவர் கூறுகிறார் அல்லவா! கடுமையான உழைப்புக்கு எவ்வளவு நல்ல பலன் கிடைத்துள்ளது. தந்தை தன் மகனைப்பார்த்து “எனக்கு இனிமேல் கவலையில்லை” என்கிறார். உழைத்த காசுக்கு தனி மதிப்பும் மரியாதையும் எண்டு என்பதை இந்தக் கதை எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல், மனிதப்பிறவி எடுத்துள்ள நம் அனைவருக்கும் ஒரு பொறுப்பையும் இறைவன் தந்துள்ளான். அது நீங்கள் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் பட்டம் பதவிகள் பெற்றாலும் அவைகளுக்கெல்லாம் மேலே ஈடு இணையற்ற ஒரு கடமை நமக்கு உள்ளது.

அதைச் செய்யத்தான் நாம் இப்புவியில் வந்துள்ளோம். அது மேன்மையானதும் மகத்தானதுமான கடமையாகும். அது நம் ஆன்மாவைக் கரைசேர்ப்பது என்கிற ஒரு மகத்தான தர்மத்தைச் செய்வதற்கென்றே வந்துள்ளோம். அதற்கு நாம் நேரத்தை ஒதுக்க வேண்டும். இறைவனுக்காக நேரத்தை ஒதுக்கி தியானம் செய்ய வேண்டும். தினந்தோறும் தியானத்தால் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை நாம் அடைய வேண்டும்.

தியானத்தால் ஒரு முகப்படுத்தி இறைவனைக் காண்பதற்காக உழைப்பதுதான் நமது தேவையாக இருக்கிறது. இவ்வுலக வியாபாரங்களில் மனதை ஒருமுகப்படுத்தாமல் இறைவனுக்காக நமது பணிகளைச் செய்தும் அவனுக்காக வாழ்ந்தும் நமக்குக் கிடைத்துள்ள இந்த மனிதப்பிறவியை கழிப்பதுதான் சாலச்சிறந்தது.

அதே சமயம் அதுதான் இன்றியமையாத ஒரு தேவையுமாகும். குருதேவர் அதைத்தான் உறுதிப்படுத்திக் கூறுகிறார். நல்ல வழியில் உழைத்து சம்பாதித்தால்தான் நல்ல வாழ்க்கை வாழலாம். தீய வழியில் சென்றால் அமைதியான வாழ்க்கை வாழ இயலாது. இறைவன் விவேகத்தைத் தந்துள்ளான். அதைவைத்து நாம் இறைவனைத் தேடுவதில் குறியாக இருக்கவேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். நம் பணி நமக்கு நன்மையை தரும் வண்ணம் நாம் வாழ வேண்டும்.




மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



GET IT ON Google Play

# குறைகளை கோடிமுறை சொன்னாலும் கோபப்படாமல் தீர்த்துவைக்கும்

# கந்தசுவாமி



"பொழியும் அடியார்கள் கோடிகுறை கருதினாலும் வேறு முனிய அறியாத தேவர் பெருமாளே"

என்கிற இந்த அற்புதமான அருணகிரிநாதரின் வரிகளை தனது ஒவ்வொரு சொற்பொழிவிலும் கூறி இன்புறுவார் திருமுருக வள்ளல் கிருபானந்த வாரியார்.

அப்படி என்ன வரிகள் இவை??

நாம் ஒருவரிடம் பணம் வேண்டியோ அல்லது பொருள் வேண்டியோ ஒருமுறை செல்லலாம். இரண்டு முறை செல்லலாம். அடிக்கடி சென்றால் அவர் வெறுப்படைந்து விடுவர். இது இயற்கையான ஒன்று.

ஆனால் நமது குறைகளை ஒருவரிடம் கோடிமுறை சென்று சொன்னாலும் கோபப்படாமல் நமக்கு வேண்டியதைக் கொடுப்பவராம்.

அவர் யார் ??

வேறு யாருமல்ல..... கருணைக் கடவுளான கந்தசுவாமிதான் அவர்.

எந்த இடத்தில் சென்று கந்தனிடம் சொன்னால் நமது குறைகள் தீரும் ??

சோமநாதன் மடத்தில்.....

சோமநாதன் மடம். இன்று வழக்கில் இவ்வூர் 12 புத்தூர் என்று வழங்கப்படுகிறது.

வடமொழி வல்லுனர்களான திண்டிமக்கவிகள் பலர் வாழ்ந்த முள்ளண்டிரம் என்ற ஊருக்கு அருகில் இந்த 12 புத்தூர் அமைந்துள்ளது. இவ்வூரே அருணகிரிநாதரின் பிறப்புத் தலமாகும்.



www.aanmeegamalar.com






இயற்கை எழில் சூழ்ந்த இந்த 12 புத்தூரில் சோமநாத ஜீயர் என்கிற சிறந்த சிவனடியார், மடம் ஒன்றை அமைத்து, வாழ்ந்து வந்தார்.

அருணாசலேஸ்வரரை தனது ஆத்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு, நியமம் தவறாது பூஜை செய்து வந்தார். அடியார்களுக்கு அருந் தொண்டாற்றி வந்த இவர், அரிய தவராஜனாக விளங்கினார். அவணி (உலகம்) புகழ்ந்த இவரது பெருமைகளை தனது திருப்புகழிலே புகழ்ந்துள்ளார் அருணகிரிநாதர். அருநகிரிநாதரின் சம காலத்தில் வாழ்ந்தவர் இத்தலத்தின் சோமநாத ஜீயர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மடத்தில் முருகப்பெருமானை விசேடமான முறையில் பூஜை புரிந்து வந்ததை தனது திருப்புகழிலே பாடிப் பரவி யுள்ளார் அருணகிரியார்.

இங்கே கிடைத்த கல்வெட்டுகளின் மூலமே சோமநாத ஜீயரின் விபரங்கள் நமக்கு தெளிவாயின.

கி.பி. 1348 ஆம் ஆண்டு வீரபொக் கண்ண உடையார் மகன் கம்பண்ண உடையார் காலத்தில் ஸ்ரீவித்யாபதீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான மடத்தின் பொறுப்பையும், காணி ஆட்சியையும், மனையையும் சோமநாத ஜீயருக்குக் கொடுத்து கௌரவித்துள்ளார்.

கி.பி.1355 ஆம் ஆண்டு ஹரிஹரஉடையார் காலத்தில் வித்யாபதீஸ்வரர் கோயிலில் திருப்பணிகள், நித்திய பூஜை, திருவிழாக்கள் போன்றவை நடத்திட முழு சுதந்திரமும், நிலங் களும், சோமநாத ஜீயருக்கு கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் செல்வாக்கையும், மகேசன் செல் வாக்கையும் ஒருங்கே பெற்ற இந்த சோமநாத ஜீயர் இவ்வூர் மக்களால் "ஐயன்" என்றே அழைக் கப்பெற்று வந்துள்ளார்

இதன் பொருட்டு, பின்னாளில் இவ்வூர் ஐயன் புத்தூர் என்றே அழைக்கப்பட்டது. தற்போது 12 புத்தூர் என வழங்கப்படுறுகிறது.

கிழக்குப் பார்த்த திருக்கோவில். தென்முக இராஜகோபுரம் ஒரு காலத்





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்

"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்







தில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படு கின்றன, சுற்றுமதில் காணப்படவில்லை.

முதலில் பலிபீடம் மற்றும் நந்தி மண்டபம். பின், சில படிகள் கொண்ட முகமண்டபம். இங்கே பிறைநிலவுடன் கூடிய காளையின் புடைப்பு சிற்பத்தைக் காணலாம். விஜயநகர அரசர்களின் சின்னமிது.

நடுவே வாயில். வாயிலுள் நுழைந்து, உள்ளே செல்ல... மகாமண்டபம். அதன் வலப்புறம் சோமநாத ஜீயர் மற்றும் அருணகிரிநாதருக்கு சிற்பங்கள் காணப்படுகின்றன. அருகே சோம நாத ஜியரது வரலாற்றுக் கல்வெட்டு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மகா மண்டபத்தை அடுத்து, அந்த்ராளம் மற்றும் மூலஸ்தானம். கருவறையுள் அருளேவடி வாய், அழகே உருவாய் அற்புதப் பொலி வுடன் திருக்காட்சி அளிக்கின்றார் ஸ்ரீவித்யாபதீஸ்வரர். வித்தைகள் பல கற்றிட, இவரை சரணடைவதைவிட வேறு என்ன வழி இருக்கிறது நமக்கு?

அரனாரை அடிபணிந்து ஆலய வலம் வருகையில்... நிருர்தி மூலை யில் தல கணபதியை யும், அடுத்ததாக வள்ளி தெய்வானையுடனான கந்தக் கடவுளையும் தனிச்சன்னதியில் காண்கின்றோம். சுவாமி கோமுகத் தருகே சண்டிகேஸ்வரர் சன்னதி கொண்டுள்ளார்.



மோ.கணேஷ்

அருணகிரிநாதர் இங்கே முருகனை அகப் பகை மற்றும் புறப்பகை நீங்கிட வழிபட்டு, திருப் புகழ் பாடியுள்ளார்.

பின்னர், தென்முகம் பார்த்த அம்மையின் சந்நிதி, புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அம்பிகையாக ஸ்ரீ அக்ஷரவல்லி சிறிய வடிவில் நின்றவண்ணம் அபயமளிக்கின்றாள்.

அரசர் காலத்தில் சிறப்புற்றிருந்த இந்த கோவில் அன்னியர் படையெடுப்பாலும், இயற்கையின் சீற்றத்தாலும், முற்றிலும் சிதிலமடைந்துப் போனது.

சிறுவாபுரி முருகன் அபிஷேக குழுவின் பெருமுயற்சியால் கடந்த 2012ஆம் ஆண்டு குடமுழுக்கு கண்டு, தற்போது புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது ஆலயம்.

கடைசியாக இந்த ஆலயம் 1810 இல் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாலய கல்வெட்டுகள் அனைத்தும் மண்மூடி மறைந்து இருந்தது. அதை வெளியே எடுத்து படி யெடுத்தபோது, பல அரிய தகவல்கள் நமக்கு கிடைக்கப் பெற்றன. இது தவிரவும் மண்டபத்தின் வெளிச் சுவர்களிலும் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

அரசுக்கு சொந்தமான இவ்வால யத்தில் தினமும் ஒரு கால பூஜை






மட்டும் நடைபெறுகின்றது. இவ்வாலயத்தை ஊர் நிர்வாகத்தினர் உதவியுடன் எப்போது வேண்டு மானாலும் தரிசிக்கலாம்.

எல்லா வித்தைகளுக்கும், கலைகளுக்கும் அதிபதியாகத் திகழும் இத்தலத்து வித்யா பதீஸ்வரரை தேன் அபிஷேகம் செய்து வழிபட... கலைத்துறையிலும், கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கலாம்.

எழுத்து வடிவாய்த் திகழும் இத்தலத்து அன்னை ஸ்ரீ அக்ஷரவல்லியை பசும்பாலால் அபிஷேகித்து வழிபட.... எழுத்துத் துறையில் உள்ளோர் மேன்மையடையலாம். எழுத்துக்களில் புதிய பரிமாணங்களை உருவாக்கலாம்.

அருணகிரிநாதர் புகழ்ந்த இத்தல கந்தனுக்கு தேனும், தினை மாவும் நிவேதனம் செய்து வழிபட்டு, வழக்குகளில் வெற்றியையும், சிக்கல்களில் தீர்வும் பெறலாம். பகையால் உண்டாகும் துன்பங்களில் இருந்தும் விடைபெறலாம்.

அறிவாற்றல் குறைந்த, திக்குவாய் உள்ள குழந் தைகளை இங்கு அழைத்து வந்து வழிபாடுகள் செய்ய... சிறந்த அறிவாற்றலும், இனிய குரலும் கிடைக்கப்பெறுகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில், ஆரணி ஆற்காடு பேருந்து சாலை யில் உள்ள தாமரைபாக்கத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது 12 புத்தூர்.

– ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ் குருக்கள்,
ஆரணி. தொடர்புக்கு : 9789156179.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கோவிந்தா... கோவிந்தா... தோன்றிய வரலாறு




புரட்டாசி மாதம் பிறந்தாலே "கோவிந்தா... கோவிந்தா..." என்ற நாமம் எங்கும் கேட்கத் துவங்கும். இந்த கோவிந்தா நாமம் எவ்வாறு உருவானது என்று, ஒரு செவி வழிக்கதை உண்டு.

இந்த செவி வழிக்கதை முழுவதுமாகநிரூப மான வரலாறு என்று கூறிவிட முடியாவிட்டாலும், கோவிந்தா நாமம் பற்றி மிகுந்த சுவாரஸ்யமாக அவசியம் தெரிந்து கொள்ளலாம்.

திருமலை திருப்பதியில் நின்ற கோலத்தில் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். பெருமாளுக்கு ஆயிரம் நாமங்கள் உள்ளன அவற்றுள் சிறப்பு மிக்கவை பன்னிரண்டு. அதிலும் முக்கியமானதாக போற்றப்படுவது `கோவிந்தா' என்னும் நாமம். இந்த நாமம் ஏற்பட்டதற்கு ஒரு சுவாரஸ்யமான புராண சம்ப வம் ஒன்று சொல்லப்படுகிறது.

மகாவிஷ்ணு கலியுகத்தில் அவதரிக்க முடிவு செய்து, மனித வடிவில் திருப்பதிப் பகுதியில் தோன்றினார். மனித உருவில் வந்த காரணத்தால் அவருக்கும் பசி, தாகம் போன்ற அடிப்படை உணர்வுகள் இருந்தன. பால் அருந்த ஒரு பசு இருந்தால் நலம் என நினைத்தவர் மலைக்கு அருகில் இருந்த அகத்திய முனி வரிடம் பசுவை வேண்ட, அகத்தியரோ பிரம் மச்சாரிக்கு பசுவை தானமளிக்க இயலாது என கூறியுள்ளார்.

பின்னர் அவர் பத்மாவதியை மணம் முடித்து திரும்பி வரவே அங்கு அகத்தியர் இல்லை. அவரது சீடர்களிடம் பெருமாள் பசுவை வேண்டவே, குரு இல்லாமல் தர முடியாது என கூறிவிட்டனர். அதன்பின்னர் பெருமாள் அங்கிருந்து விடைபெற்று செல்ல சற்று நேரத்தில் அகத்தியர் அங்கு வந்துவிட நடந்தவற்றை கேட்டு வருத்தமடைந்தார்.

ஒருபசுவிற்காக அவரை அலைக்கழித்ததை எண்ணி வருத்தம் கொண்ட அகத்தியர் தன்னிடம் உள்ள சிறந்த பசுவை தேர்ந்தெடுத்து அவிழ்த்துக்கொண்டு பெருமாள் சென்ற திசை நோக்கி ஓடினார். சற்று தூரத்தில் பெருமாள் கண்களின் தென்படவே, அவரை, " சுவாமி ., என விளித்து "கோ இந்தா"(கோபசு என்றும் `இந்தா' என்றால் எடுத்துக்கொள் என்றும் பொருள்) என கூறியவாறு அழைக்க பெருமாளிற்கு கேட்கவில்லை.

மீண்டும் மீண்டும் "கோ இந்தா" "கோ இந்தா" என அழைத்தவாறே ஓட்டமும், நடையு மாக அகத்தியர் பின் தொடர 108 முறை அழைத்தபின்னரே பெருமாளுக்கு குரல் கேட்டு திரும்பியுள்ளார்.

அகத்தியரை பார்த்து மகிழ்ச்சியுற்ற பெருமாள் "கோ" வை தானமாக பெற்று கொண்டு கோவிந்தா என்பதே இந்த இந்தக் கலியுகத்தில் என்னை அழைக்க உகந்த நாமம். `கோவிந்தா' என்னும் நாமத் தைச் சொன்னாலே போதும், நான் உடனடியாக அவர்களை நோக்கி அனுக்கிரகம் செய்வேன்" என்று சொல்லி விடைபெற்றுத் திருமலையில் குடி புகுந்தான். என்பதே அவரது பெயருக்கு காரணமாக கூறப்படுகிறது.




# விஷ்ணுவின் ஐந்து நிலைகள்

ஸ்ரீவைஷ்ணவத்தில் விஷ்ணுவின் ஐந்து நிலைகளை மிகச் சிறப்பாக குறிப்பிட்டுள்ளது.

இவை 1.பர, 2.வியூகம், 3.விபவம், 4.அர்ச்ச 5.அந்தர்யாமி. இவற்றை விரிவாக பார்ப்போம்.

பர: என்பது ஸ்ரீவைகுண்டத்தில் லெட்சுமி மற்றும் பூதேவியுடன் இணைந்து காணப்படும் உன்னத நிலையாகும்.

வியூகம்: என்பது பிரபஞ்சத்தின் செயல் பாடுகளைச் செயலாக்குவதற்கும், உயிர் படைத்தல் முதலிய செயல்பாடுகளை நெறிப் படுத்தும் நிலையாகும்.

விபவம்: என்பது விஷ்ணுவின் பத்து அவ தாரங்களுடன் தொடர்புடைய ஒன்றாகும்.

அந்தர்யாமி: என்பது உயிர் பொருத்தலும் ஆன்மா அல்லது உட்பொருளாக இருந்திடும் அற்புத நிலையாகும்.

அர்ச்சா: என்பது சாதாரண மக்கள் திருக்கோயிலில் வைத்து வழிபடும் இறை யுருவங்களுடன் தொடர்புடையதாகும்.

இந்த அர்ச்சா என்ற நிலையில்தான், அச்சுதன் தொடங்கி ஆயிரம் நாமங்களைப் பெற்று பூலோகத்தில் மகாவிஷ்ணு போற்றப் படுகிறார்.

இப்பெயர்கள் மகாபாரதத்தின் ஒரு பகுதி யாக அமைகின்றன. பாண்டவர்களுக்கும் துரியோதனுக்கும் இடையே நடைபெற்ற குருஷேத்திரப் போரில் பீஷ்மர் கிருஷ்ணனின் முன்னிலையில் இப்பெயர்களை உச்சரித்த தாகக் கூறப்படுகிறது.

# தத்துவ நூல்கள் ஒன்றே தனிமையாய் கடவுளை எடுத்துச் சொல்லுகிறது விளக்குகிறது

மதம் என்றால் என்ன? கடவுள் இருக்கிறான் என்ற நம்பிக் கையை வலியுறுத்துகின்ற கருத்தே அது. உலகில் எப்பொழுதும் நிரந்தரமாய் இருக்கின்ற அக்கருத்து மனித ஆற்றலைக் காட்டிலும் பெரிய ஆற்றலைக் கொண்டது. அதுவே தனது பெரிய ஆற்றலை வைத்து கொண்டு உலகில் உள்ள உயிர்களை நிரந்தரமாய் அற்புதமாய் ஆட்சி செய்கிறது. அதனால் உயிரும் உணர்ச்சியும் உள்ள சமுதாயம் அந்த சக்தியை நினைக்க வேண்டும், தொழ வேண்டும் என்று சொல்லுவதே மதம்.

❖❖❖

உலகிற்கு இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கின்றனவா? கடவுள் என்பது ஒரு தனிப்பொருளா? அதாவது பரம்பொருளா? அல்லது அசைக்க முடியாத ஒரு பெரிய கொள்கையா? கடவுளை இத்தகைய கொள்கையாக உற்பத்தி செய்தது அல்லது செய்து காட்டியது உலகிலுள்ள மேல்நிலை சிந்தனை வர்க்கமா? இல்லை என்றால் இச்சிந்தனையைச் செய்த சிந்தனையாளர்களே கடவுளா? இதைத்தவிர வேறு ஏதாவது விளக்கங்கள் உண்டா? முதலில் இதைக் கேட்டுக் கொள். மனிதனை மேலும் மேலும் மறுபடியும் மறுபடியும் சிந்திக்க வைக்கும் முதலில் வரும் கொள்கையே கடவுள். உதாரணம் யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே, இதுபோல எனலாம்.

❖❖❖

தாங்கள் சொல்வதுதான் நிலை என்றால் பரம்பொருள் என்ற ஒரு பொருள் உருவானதை விளக்குவதற்கு ஒரு உறுதியான மூலவிளக்க அறிவுநூல்கள் இருக்குமே அல்லது அறிவு இருக்குமே. இவ்வண்ணம் உண்மையை உணர ஒரு மூலஅறிவு இருக்குமே. ஆனால் உலகமும் அங்குள்ள பல மதங்களும் மாறுபட்ட விதவிதமான ஆயிரம் தத்துவநூல்களை உருவாக்குவானேன் தத்துவநூல்கள் வித்தியாசப்படுவதின் நோக்கம் என்ன என்பதே என் கேள்வி.

❖❖❖

கடவுளைப் பற்றிய பல எண்ணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிற்சில பிரபஞ் சத் தில் உள்ள கண்பார்வைக்கு எட்டக் கூடிய பஞ்சபூதங்களையே கடவுள் என்று சொல்லுகின்றன. வேறு சில அப்படி சொல்லவில்லை. உலகையே ஆட்டிப்படைக் கின்ற பஞ்சபூதங்கள் வெளிப்படுத்துகின்ற சக்திதான் கடவுள் என்றும் சொல்லாமல் இருக்கின்றன. இவ்வண்ணம் உலகில் கடவுளும் கடவுளின் தத்துவமும் திண்டாடுகின்றது. அதனால் பல தத்துவ நூல்கள் தோன்றின.

❖❖❖

உண்மையில் தத்துவநூல்களில் உதவி என்ன? சில சிந்தனையாளர்கள் கருத்தாக சொல்வதெல்லாம் இந்நூல்களெல்லாம் பிரமிக்கும்படியான பல வார்த்தைகளைக் கொண்ட நூல்களே என்கிறார்கள். பிரமிக்கத்தக்க உதாரணங்களும், அழகான வார்த்தைக் கோர்வைகளும் உடனே






ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
⬩⬩⬩
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
⬩⬩⬩
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
⬩⬩⬩
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



**ஆசிரியர் குழுவில் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


எடுத்துக் கொள்ள கூடிய உபயோகமான உதாரணக் கவிதைகளாகவும் இவைகள் இருக்கின்றன. இதுபோன்ற கவிதைகள் சாதாரணக் கவிதைக் கோர்வையிலும் இலக்கியத்திலும் இருந்து கொண்டு மக்களுக்கு உதவி செய்கின்றன. வேறு ஒரு நிலையில் பார்த்தால் கடவுளைப் பற்றிக் கூறாத இலக்கியங்களும் கவிதைகளும் இயற்கைதான் கடவுள் என்று நெறிப்படுத்தி வலியுறுத்தியதும் இல்லை. இதனிடையில் தத்துவ நூல்கள் ஒன்றே தனிமையாய் கடவுளை எடுத்துச் சொல்லுகிறது விளக்குகிறது. இந்தவகையில் இது தனியானதே வேறானதே.

❖❖❖

உலகில் இன்றுவரை சில மதங்கள் நிலவி வருகின்றன. புத்தமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம், இந்துமதம் போன்றவைகளும் பிறமதங்களும் சிறப்பானவைகளே. இவையனைத்தும் மனிதர்களுக்கு உபயோகமாக இருக்கிறது. இதில் எந்த மதம் சிறந்தது? எது வரிசைக் கிரமத்தில் முதலிடத்தைப் பிடிக்கிறது? நீங்களோ அல்லது வேறு எவரேனுமோ இம்மதங்களை வரிசைப்படுத்தி சொல்லுவார்களா?

❖❖❖

மேற்கண்ட மதங்களை ஆராய்ந்து படித்து துருவி வரும் பொழுது முறைப்படுத்துகின்ற இம்முறை சிந்தனை நியாயமானதாக இருக்கும். சாதாரண உலகிற்கும் கல்வி உலகிற்கும் இது தேவை. ஒரு மதவாதிக்கு எது மேல் கீழ் என்பது தேவையில்லை. ஒவ்வொரு மதமும் தனக்கென்று ஒரு பாதையையும் உண்மையை உணரும் வழியையும் தனித்தனியாக வைத்துக் கொண்டிருக்கின்றன.

❖❖❖

இந்துமதம் உட்பட உலகமதங்களுடன் புத்தமதம் எப்படி முழுமையாக வேறுபடுகிறது? முதலில் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள் என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு புத்தமதம் சிந்திக்கப்படவில்லை. தோற்றுவிக்கப்படவும் இல்லை. அது முழுக்க முழுக்க மனிதனின் சிந்தனையை அடிப்படையாக கொண்டது. புத் என்ற காரணப்பெயர் அதற்கு இதனால் ஏற்பட்டது. ஆச்சரியப்படக்கூடிய பல மதங்களுக்கு மத்தியில் இதுவே புத்த மதத்தின் வேறுபாடு.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# மகாவிஷ்ணுவும் பத்து அவதாரங்களும்




மனித வாழ்வின் நியதிகளை பேணும் பொருட்டு, தெய்வங்கள் நம்மில் ஒருவராக அவதாரமெடுத்து நமக்கு வரும் துன்பங்களை தீர்த்து வைப்ப தாக புராணங்களும் இதிகாசங்களும் தெரிவிக்கின் றன. அப்படி மனிதகுலத்தின் மேம்பாட்டுக்காக எடுத்த அவதாரங்களுள் காக்கும் கடவுளான விஷ்ணுவின் ‘தசாவதாரம்’ எனப்படும் பத்து அவதாரங்களே வெகு சிறப்பாக கருதப்படுகிறது.

‘பரித்ராணாய ஸாதூநாம்
விநாஸாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தா பநார்தாய
ஸம்பவாமி யுகே யுகே’

அதாவது ‘நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறத்தை நிலைநாட்டவும், நான் யுகந்தோறும் பிறக்கிறேன்’ என்று பகவத் கீதையில் கண்ணன் கூறுகிறார்.

நீதியும், நேர்மையும் அழிந்து. தீமைகள் பெருகி உலகமே அழிந்து போகும் நிலையான ஒவ்வொரு யுகங்களின் முடிவிலும், நீதியை நிலைநாட்டும் பொருட்டு ஒவ்வொரு அவதாரத்தையும் அவர் எடுத்துள்ளதாக ஐதீகம். அந்த அவதாரங்களின் நோக்கம் மற்றும் சிறப்புகளை சுருக்கமாக இங்கே காண்போம்.

### மச்ச அவதாரம்

தசாவதாரத்தின் முதல் அவதாரம் இது. ஒரு யுகத்தின் முடிவான பிரளய காலத்தில், பிரம்மன் தவத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது அவரிடம் இருந்த படைப்புத் தொழிலுக்கும், உயிர்களின் உன்னத வாழ்விற்கும் அடிப்படையான நான்கு வேதங்களையும் மது, கைடபர் எனும் அசுரகுணம்

கொண்டவர்கள் திருடிச் சென்றனர். உலகத்தை தங்கள்வசம் அடக்கும் பேராசையுடன்வேதங்களை திருடிய அவர்கள், அதைக் கடலில் ஒளித்து வைத்தனர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, திருமால் மச்ச (மீன்) அவதாரமெடுத்து கடலில் நீந்திச் சென்று, அசுரர்களை அழித்து வேதங்களை மீட்டார். பின்னர் வேதங்களை சுவாயம்புவ மனுவுக்கு உபதேசித்து, அவரைப் பிரளயத்திலிருந்து காப்பாற்றியதாக வரலாறு. உயிர்களின் ஆதாரம் நீர் என்பதை உணர்த்தவே பெருமாளின் முதல் அவதாரம் நீரில் வாழும் உயிராக நிகழ்ந்தது.

### கூர்ம அவதாரம்

காலம் காலமாக நன்மைக்கும் தீமைக் கும் இடையில் யார் பெரியவர் எனும்போட்டிகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. அநீதியை வென்று தர்மமே நிலைக்கும் என்பதை உலகத்தாருக்கு உணர்த்த அந்த தேவலோகத்திலும் இப்போட்டிகள் அவ்வப்போது நிகழ்வதுண்டு. அவ் வகையில் புராணங்களிலும் இதிகாசங்களிலும் பெருமளவில் பேசப்பட்ட நிகழ்வு இது.

இறைவன் துயிலும் பாற்கடலில் நிறைந்திருக்கும் இறவா வரம் தரும் அமுதத்தை பெற தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையில் கடும்போட்டி நிலவியது. பாற்கடலைக் கடைவதற்கு மகாமேருவான மந்தாரமலையும், பலம் பொருந்திய நாகமாகிய வாசுகியும் களமிறங்கின. மந்தார மலை கடலைக் கடையும் மத்தாகவும் வாசுகி கயிறாகவும் மாறினர். மலையைத் தாங்கும் வலிமை கொண்ட பெருமாள், மந்தார மலை நிலையாக நிற்க அதைத் தாங்கும் கூர்மம் (ஆமை) அவதாரம் எடுத்து அவர்களுக்கு உதவியதாக புராணம் சொல்கிறது.

### வராக அவதாரம்

தசாவதாரத்தின் மூன்றாம் அவதாரம் இது. பன்றியின் வடிவம் கொண்டது. உயிர்களில் உயர்வு தாழ்வு எதுவும் இல்லை என்பதை உலகுக்கு உணர்த்த இறைவன் எடுத்த அவதாரம் இது. ஒரு பிரளயகாலத்தில் தன் அசுர சக்தியை பிரயோகித்து பூமியை பாய் போல் சுருட்டி, கடலின் அடியில் மறைத்து வைத்தார் இரண்யாட்சன். மகாவிஷ்ணு.. வராக அவதாரம் எடுத்து, அசுரனை அழித்து பூமியை தன் கொம்புகளால் ஏந்தி வந்ததாக வரலாறு.

அசுரனின் கொடுமைகளைத் தாங்காமல் பூமி மாதா கடலுக்குள் அழுந்தியதாகவும் அசுரனை அழித்து பழையபடி பூமியை நிலை நிறுத்த வராகம் உதவியதாகவும் மற்றொரு கதையும் உண்டு.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மீகமலர்.காம்




## நரசிம்ம அவதாரம்

தசாவதாரத்தில் நினைத்ததும் வந்துகாப்பாற்றும் கடவுளாக, விளங்குபவர் நரசிம்மர்.வராக அவதாரத்தில் விஷ்ணு வதம் செய்த இரண்யாட்சனின் சகோதரன் இரண்யகசிபு. இவர் விஷ்ணுவை வெறுத்து தானே கடவுள் என்று கூறிக்கொண்டான். ஆனால் இரண்யனின் மகனான பிரகலாதன், நாராயணரின் மீதும் பக்தி கொண்டவனாக இருந்தான். இதனால் மகன் என்றும் பாராமல் அவனைக் கொல்ல முயன்ற போது, நரசிம்மர் தூணில் இருந்து வெளிப்பட்டு இரண்யனை வதம் செய்தார். பக்தன் நம்பிக்கையுடன் சரணடைந்தால், இறைவன் எந்த உருவெடுத்தும் வருவார் என்பதைக் காட்டிய அவதாரம் இது.

## வாமன அவதாரம்

தசாவதாரத்தில் ஐந்தாவது வாமன அவதாரம். பிரகலாதனின் வழித்தோன்றலான மகாபலி எனும் அசுர அரசன், தேவலோகத்தையும் பூலோகத்தையும் வெற்றிகொண்டு தேவேந்திர பதவியையும்அடைந்தான். இவனுக்குப் பயந்த இந்திரன் முதலிய தேவர்கள், மகாபலி வரமுடியாத இடத்தில் போய் மறைந்து வாழ்ந்தனர். மகாபலியின் புகழ் ஓங்குவது கண்ட இந்திரன் முதலானவர்கள், தாங்கள் இழந்த பதவியைமீண்டும் பெற உதவுமாறு விஷ்ணுவிடம் வேண்டினர். இதையடுத்து திருமால், குள்ளமான உருவம் கொண்டு மகாபலியிடம் மூன்று அடி மண் கேட்டார். முதல் அடியில் பூமியையும், இரண்டாம் அடியில் வானத்தையும் அளந்தவர், மூன்றாவது அடியை மகாபலியின் தலையில் வைத்து அவனை பாதாளத்தில் தள்ளி முக்தி அருளியதாக புராணம் சொல்கிறது.

## பரசுராமர்

தசாவதாரத்தின் ஆறாவது அவதாரம் பரசுராமர். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உலகமக்களுக்குநிரூபித்தவர். ஜமதக்னி எனும் தவசீலருக்கும் ரேணுகாதேவிக்கும் கடைசி புத்திரனாக அவ தரித்தவர். ஒரு நாள் ரேணுகாதேவி ஒரு கந்தர்வ னின் அழகில் மயங்கி, தன்கணவனுக்கு செய்யும் பூஜையில் தவறினாள்.

இதனால் அவளது தலையை வெட்டும்படி ஜமதக்னி, தன் மகன்களை அழைத்து கூறினார். அவர்கள் தயங்கினர். இதனால் கடைசி மகனான பரசுராமரை அழைத்து, தாய் மற்றும் சகோதரர்களின் தலையை வெட்டச் சொன்னார். அவரும் வெட்டி வீழ்த்தினார். பின்னர் ஜமதக்னி என்ன வரம் வேண்டும் என்று கேட்க, 'தாயையும், சகோதரர்களையும் மீட்டுத் தாருங்கள்' என்று வேண்டினார். மற்றொரு முறை தன் தந்தையைக் கொன்ற சத்திரியர்களின் வம்சத்தையே அழித்தொழித்தார்.



கீதாராஜன்

## ராமபிரான்

ராமர் அவதாரமே தசாவதாரத்தின் ஏழாம் அவதாரமாகும். ஒருவனுக்கு ஒருத்தி எனும் தத்துவத்தை உலகுக்கு உணர்த்தவும், பெற்றவர்களின் சொல் கேட்டு நடந்து சகோதர்களுடன் ஆன உறவை மேன்மை செய்யவும், அநியாயம் புரிபவரை அழிக்கும் வீரனாகவும், இன்னும் மனிதருக்கான பல வாழ்வியல் நெறிகளை அதன்படி வாழ்ந்து காட்டிய அவதாரம் இது. ராவணன், சீதையைக் கவர்ந்து சென்றான்.

தன் மனைவியை மீட்க வானரங்களோடு சேர்ந்து ராவணனுடன் போரிட்டு அவனை அழித்தார் ராமபிரான்.

### பலராமர்

விஷ்ணுவின் எட்டாம் அவதாரம், பலராமன். விஷ்ணுவின் அம்சமான ஆதிசேஷனே இரண்டாகப் பிரிந்து பலராமனாகவும், கிருஷ்ணராகவும் தோன்றியதாக சில கருத்துகள் உள்ளன. பலராமர் கண்ணனின் சகோதரர் என்பதற்கே அதிக ஆதாரங்கள் உண்டு. இப்படி இருவேறு கருத்துகள் இருக்கின்றன. வசுதேவருக்கும் அவரின் முதல் மனைவியான ரோகினிதேவிக்கும் பிறந்தவரே பலராமன். தம்பியான கண்ணனுக்கு பலவிதங்களில் உதவி செய்து தன் தாய் தந்தையரையும் மக்களையும் இம்சித்து வந்த கம்சனை அழித்ததில் இவருக்கும் முக்கியப் பங்குண்டு. இவரின் தோளில் எந்நேரமும் வீற்றிருக்கும் கலப்பை, உலகின் ஆதாரமான விவசாயத்தின் முக்கியத்துவத்தை உலகுக்கு எடுத்துரைக்கிறது.

### கிருஷ்ணர்

விஷ்ணுவின் ஒன்பதாம் அவதாரமான கண்ணன், பாலகனாக பல லீலைகள் புரிந்தவர். கம்சன் எனும் கொடுங்கோலனை வதம் செய்தவர். பின் கிருஷ்ணனாக நீதிக்கும் அநீதிக்கும் நடந்த போரில் நீதியின் பக்கம் நின்று குருசேத்திரப் போர் நடக்க உதவியவர். பாண்டவர்களுக்கும் கவுரவர் களுக்குமான அந்த யுத்தத்தில்,பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனின் சாரதியாக இருந்து, அவனுக்கு பகவத் கீதையை போதித்தவர். அநீதியை சூழ்ச்சியால் முறியடிப்பது தீமையாகாது என்பதை உணர்த்திய அவதாரமே கிருஷ்ணாவதாரம்.

### கல்கி

உலகில் நன்மைகள் குறைந்து, தீமைகள் கட்டுக்குள் அடங்காமல் போகும்போது, இறைவன் தோன்றி தீமைகளை அழித்து புதுயுகத்தைப் படைப்பார் என்பது இந்து சமயத்தின் நம்பிக்கை.

அதன்படி தற்போது நடைபெறும் கலியுகத்தின் முடிவில் விஷ்ணுவின் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரம் நிகழும் என்று அனைவராலும் நம்பப்படுகிறது. உலகில் தீமைகள் தலை விரித் தாடும் போது விஷ்ணுவின் தீவிர பக்தனுக்கு மகனாக பிறப்பார் கல்கி என்கிறது பாகவதம்.

தொகுப்பு: கீதாராஜன்
தொடர்பு எண்: 9444228203


பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்




கீதாசமையல் சேனலை பாருங்கள் Share & like செய்யுங்கள்




# புரட்டாசி சனிக்கிழமையும் விரதத்தின் முக்கியத்துவமும்

சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறப்பானது. அதிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறந்தது.

பெருமாளுக்கு உரிய திருத்தலங்களில் திருப்பதி வெங்கடாசலபதி கோயில் மிகவும் உயர் வானதாக கருதப்படுகிறது. இங்கு பீமன் என்ற குயவன் வாழ்ந்து வந்தான். அவன் பெருமாளின் மிக தீவிர பகதன். அவன் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதாக சங்கல்பம் எடுத்துக் கொண டார்.

ஆனால் மிகவும் ஏழையான பீமன் விரதம் என்பதற்காக கோயிலுக்கு செல்லக் கூடிய சூழல் இல்லாமல், எப்போதும் பானை போன்ற மண்பாண்ட பொருட்களை செய்து வந்தான்.

அப்படியே கோயிலுக்கு சென்றாலும், பூஜை செய்ய தெரியாது. அப்படி ஒரு கோயிலுக்கு செல்லும் போது, சுவாமியைப் பார்த்து, ‘நீ எல் லாம்’ என்ற வார்த்தையை மட்டும் சொல்லி விட்டு வந்துவிடுவார்.

இந்நிலையில், கோயிலுக்கு போக நேரம் இல்லாததால், பெருமாளையே இங்கு அழைத்து விட்டால் என்ன என எண்ணினார். அதனால், அவர் களிமண்ணால் ஒரு பெருமாள் சிலையை செய்தார். அதை பூஜிக்க பூக்கள் வாங்க கூட பணம் இல்லை. அதனால் தினமும் தன் வேலை யில் மீதமாகும் சிறிதளவு களிமண்ணை வைத்து பூக்களை செய்து வந்தார்.

அப்படி செய்த பூக்களை கோர்த்து, மண் பூ மாலையாக செய்து பெருமாளுக்கு அணிவித்தார்.

அந்த நாட்டை ஆண்ட அரசன் தொண்டை மானும் பெருமா ளின் தீவிர பக்தன். அவர் சனிக்கிழமைகளில் தங்கப்பூ மாலையை அணிவிப்பார்.

அப்படி அவர் ஒருவாரத்தில் பெருமாளுக்கு தங்க பூ மாலை அணிவித்தார். மறு வாரத்தில் சென்று பார்க்கும் போது தங்க பூ மாலைக்கு பதிலாக களிமண்ணால் செய்யப்பட்ட மாலை பெருமாள் கழுத்தில் இருந்தது.



புனிதவேல்

இதைப் பார்த்ததும் அங்குள்ள கோயில் அர்ச்சகர்கள், பராமரிப்பாளர்கள் மேல் சந்தேகம் அடைந்து குழப்பத்தில் ஆழ்ந்தார்.

அவர் கனவில் தோன்றிய பெருமாள், குயவனின் பக்தியால், அவனின் களிமண் மாலையை தான் ஏற்றுக் கொண்டதாகவும், குயவனுக்குத் தேவையான உதவியை செய்யுமாறு அரசனிடம் கூறினார்.

திருமாலின் ஆணைப்படி குயவன் இருக்கும் இடத்திற்கு சென்ற அரசன், அந்த பக்தரை கௌரவித்தார்.

பெருமாள் மீது குயவன் வைத்திருந்த பக்தியை கௌரவிக்கும் பொருட்டு, தற்போதும் கூட திருப்பதியில் மண் சட்டியில் தான் நைவேத்யம் செய்யப்படுகின்றது.

புரட்டாசி மாதத்தில் வரும் திருவோணம் திதியில் திருப்பதி மலையப்ப சுவாமி தன்னை வெளிப்படுத்தி கொண்ட தினமாக பார்க்கப்படுகின்றது.

அதே போல், சனிக்கிழமையில் தான், சனி பகவான் அவதரித்து, புரட்டாசி மாதத்திற்கு சிறப்பை கொடுத்தார். இதன் காரணமாக புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமையில் விரதம் இருந்து பெருமாளை தரிசித்தால், சனியின் கெடுபலன்களிலிருந்து நம்மைக் காப்பார்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

# பெருமாளின் 12 பெயர்களும் 12 நாமங்களும்

பகவான் விஷ்ணுவிற்குன் 12 பெயர்கள் உண்டு, இந்த பன்னிரண்டு பெயரைக் குறிக்கும் விதமாகத்தான் அவரது பக்தர்கள் தங்கள் உடலில் 12 இடங்களில் 12 நாமங்களை இடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அந்த வகையில், விஷ்ணுவின் பன்னிரு பெயர்களாவன:

| | |
|---|---|
| 1.கேசவன், | 2.நாராயணன், |
| 3.மாதவன், | 4.கோவிந்தன், |
| 5.விஷ்ணு, | 6.மதுசூதனன், |
| 7.திரிவிக்ரமன், | 8.வாமனன், |
| 9.ஸ்ரீதரன், | 10.ருஷீகேசன், |
| 11.பத்மநாபன், | 12.தாமோதரன். |

www.aanmeegamalar.com







இப்பன்னிரு பெயர்களும் இந்து சமூகத்திலும் அதன் சமயத்திலும் மீறத்தகாத உயர் நிலையுடையவை. அதே காரணத்தினால் தான், விஷ்ணுவை முக்கிய தெய்வமாகக் கொண்ட வைணவத்தில், மரபு வழுவாதவர்கள் தங்கள் உடலின் 12 பாகங்களில் 12 குறிகள் இட்டுக் கொள்கின்றனர். ஒவ்வொரு குறியும் இப் பன்னிருவரில் ஒருவரின் 'நாமத்தைக்' (பெயரை) குறிக்கும். இந்த வழக்கம் பல நூற்றாண்டுகளாக மரபில் ஒன்றிவிட்டதால், இன்று அக்குறிகளுக்கே 'நாமங்கள்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

# இதுவரை
# வெளிவந்த
# அனைத்து
# இதழ்களையும்
# எந்தவித
# கட்டணமின்றி
# முற்றிலும்
# இலவசமாக
# படிக்க
# aanmeegamalar.com
## இணையதளத்தை
## பார்க்கவும்





















# 25,550 முதல் 36,500 நாட்கள் வாழப்போகு வாழ்க்கைக்கு இவ்வளவு ஆசை தேவையா?

வாழ்க்கையில் வளமாக வாழ, இன்று பலர் பல வழிகளில் முயற்சி செய்கிறார்கள். ஆனால் பணமும், பதவியும், வசதியான வாழ்க்கை மட்டுமே வளமான வாழ்க்கை என்று நினைத்து மனிதர்கள் செயல்படுவதால் கடைசியில் நிம்மதி இல்லாமலேயே ஆயுள் முடிவடைந்து விடுகின்றன.

சராசரியாக 70 வயது என்றால் 25,550 நாட்களும், 100 வயது என்றால் 36,500 நாட்கள் மட்டுமே உண்மையில் நாம் பூமியில் வாழப்போகும் நாட்களாகும். இந்த வாழ்க்கை மட்டுமே வளமாக அமையக்கூடாது, இந்த உடல் பிரிந்தவுடன் கிடைக்கும் வாழ்க்கைக்குத் தேவையான புண்ணியங்களும் வளமாக இருந்தால் மனிதனின் இறுதிக்கட்ட வாழ்வு நல்ல பலன்களைஅடையும். இதுதான் உண்மையான வளமான வாழ்க்கையாகும்.

கீழ்காண்பவற்றை பற்றி சற்று சிந்தியுங்கள் இந்த வாழ்க்கைக்கு மட்டுமல்ல இறுதி கட்ட வாழ்க்கைக்கும் சில வகையில் பலன் உள்ளதாக அமையும்.

- வாழ்வென்பது உயிர் உள்ள வரை மட்டுமே!
- தேவைக்கு செலவிடு.
- அனுபவிக்க தகுந்தன அனுபவி.
- இயன்ற வரை பிறருக்கு உதவி செய்.



- மற்றும் ஜீவகாருண்யத்தை கடைபிடி.
- இனி அநேக ஆண்டுகள் வாழப்போவதில்லை.
- உயிர் போகும் போது, எதுவும் கொண்டு செல்ல போவதுமில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை.
- இறந்த பின் என்ன நடக்கும் என்று மனதளவில் குழம்பாதே.
- உயிர் பிரிய தான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம், எல்லாமே பிரிந்துவிடும்.
- உயிர் உள்ள வரை, ஆரோக்கியமாக இரு.
- உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே.
- உன் குழந்தைகளை பேணு. அவர்களிடம் அன்பாய் இரு. நல்லவற்றையும், தீயவற்றை யும் நேரில் அவர்கள் உணர்ந்து கொள்ளும் சூழ்நிலையை அமைத்துக் கொடு.
- அவ்வப்போது குழந்தைகளுக்கு பரிசுகள் கொடுங்கள், அதே சமயம் தேல்வியின் வடுக்களையும் புரியவையுங்கள்..
- அவர்களிடம் அதிகம் எதிர்பாராதே. அடிமை யாகவும் ஆகாதே.
- பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள் கூட, பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ, சூழ்நிலை கட்டாயத்தாலோ, உன்னை கவ னிக்க இயலாமல் தவிக்கலாம், புரிந்து கொள்!
- அதைப்போல, பெற்றோரை மதிக்காத குழந் தைகள், உன் சொத்து பங்கீட்டுக்கு சண்டை போடலாம்.
- உன் சொத்தைதான் அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென, வேண்டிக் கொள்ளலாம். இதுகூட ஒருவித அனுபவமாக நினைத் துக்கொள், வருத்தப்படும் எண்ணத் தை வளர்த்துக் கொள்ளாதே.
- அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்; கடமை மற்றும் அன்பை அறியார் வாழும்போது அவற் றை சொல்லிக்கொடுக்க தவறாதே.
- "அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி" என அறிந்து கொள். இதை மற்றவர்களும் தெரிந்து கொள்ள வை.
- இருக்கும் போதே குழந்தைகளுக்கு கொடு.
- ஆனால், நிலைமையை அறிந்து, அளவோடு கொடு. எல்லாவற்றையும் தந்து விட்டு, பின் கை ஏந்தாதே.
- "எல்லாமே நான் இறந்த பிறகு தான்" என, உயில் எழுதி வைத்திராதே. நீ எப்போது இறப்பாய் என எதிர் பார்த்து காத்திருப்பர்.
- எனவே, கொடுப்பதை நினைப்பதை மட்டும் முதலில் கொடுத்து விடு; மேலும் தர வேண்டி யதை, பிறகு கொடு.
- மாற்ற முடியாததை, மாற்ற முனையாதே.
- மற்றவர் குடும்ப நிலை கண்டு, பொறாமை யால் வதங்காதே!
- அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு.
- பிறரிடம் உள்ள நற்குணங்களை பாராட்டு.
- நண்பர்களிடம் அளவளாவு.
- நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து, உடல் நலம் பேணி, இறை பக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உற வாடி, மன நிறைவோடு வாழ்.
- இன்னும் இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள், சுலபமாக ஓடி விடும்!
- வாழ்வை கண்டு களி!
- ரசனையோடு வாழ்!
- வாழ்க்கை வாழ்வதற்கே!
- மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன் இந்த நான்கு நபர்களை புறக்கணி!
- பொய்யன், துரோகி, பொறாமைக்கைரன், மமதை பிடித்தவன், இந்த நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே!
- அனாதை, ஏழை, முதியவர், நோயாளி, இந்த இந்த நபர்களுடன் கடினமாக நடக்காதே!
- மனைவி, பிள்ளைகள், குடும்பம், சேவகன், இவர்களுக்கு உனது கொடையை தடுக்காதே!
- பொறுமை, சாந்த குணம், அறிவு, அன்பு, இந்த விசயங்களை ஆபரணமாக அணி!
- தந்தை, தாய், சகோதரன், சகோதரி, இவர்களை வெறுக்காதே!
- உணவு, தூக்கம், சோம்பல், பேச்சு, இவற்றை குறையுங்கள்!
- துக்கம், கவலை, இயலாமை, கஞ்சத்தனம், இவற்றை தூக்கிப்போடு!
- மனத்தூய்மை உள்ளவன், வாக்கைநிறை வேற்றுபவன், கண்ணியமானவன், உண்மையா ளன், இவர்களுடன் எப்போதும் சேர்ந்து இரு!
- தியானம், யோகா, நூல் வாசிப்பு, உடற்பயிற்சி, சேவை செய்தல், இந்த விசயங்கள் அதிகம் செய்யுங்கள்!

வாழ்க்கை வளம் பெற இத்தகைய செயல்கள் ஒருவகையில் உதவலாம், கடைபிடியுங்கள்.

# பக்தர்களை அரணாக காக்கும் வராகி

சப்த மாதர்களில் அதீத வீரியமும் தீய சக்தி களை அழிப்பதில் வேகமும் துடிப்பும் கொண்டு ஓடோடி வருபவள் வாராஹிதேவி.

சப்தமாதர்களில் வராஹியின் 12 திருநாமங்கள் மிகவும் சக்திவாய்ந்தவை என்றும், இந்தத் திருநாமங்களை செவ்வாய், வெள்ளி மற்றும் வளர்பிறை பஞ்சமி காலங்களில், உச்சாடனம் செய்யச் செய்ய... நம்மை அரண் போல் வந்து காத்தருள்வாள் வாராஹி தேவி என்கிறார்கள் சாக்த வழிபாடு செய்யும் அன்பர்கள்.

வராஹி தேவியின் திருநாமங்கள்... 1. பஞ்சமீ 2. தண்டநாதேஸ்வரி 3. ஸங்கேதா 4.ஸமயேஸ்வரி 5. ஸமயஸங்கேதா 6. வாராஹி 7. போத்ரிணி 8.சிவா 9.வார்த்தாளி 10. மஹாசேனா 11. ஆக்ஞா சக்ரேஸ்வரி 12. அரிக்னி.

ஸ்ரீ நவாவரண பூஜையில் வராஹி தேவியின் மேற்கண்ட பனிரெண்டு நாமாவளிகள் கொண்ட அர்ச்சனை யை செய்ய வேண்டும். அப்போது செவ்வரளி முதலான செந்நிற மலர் களை அன்னைக்குச் சூட்டுவது கூடுதல் மகத்துவம் கொண்டது.

பில்லி, சூனியம், கண் திருஷ்டி முதலான தீயசக்திகளை நெருங்கவிடாமல் விரட்டியடிப்பவள் என வாராஹி மாலா எனும் நூல் போற்றுகிறது.

சாரதா (புரட்டாசி) நவராத்திரி என் றால் கொலு வைத்து அம்பிகையை வழிபடுவது போல, ஆஷாட நவராத்திரி யில் தானியங்கள் கொண்டு பூமியில் கோலங்கள் (ரங்கோலி) இட்டு வழிபடு வது சிறப்பு.

மாதந்தோறும் வளர்பிறைதான் வராஹி வழிபாட்டுக்கு உகந்த அற்புத நாள். கோலம் போடுவது என்பது அம்பிகையை ஆத்மார்த் தமாக வரவேற் கும் வடிவம்.

லக்ஷ்மியின் வருகை தினமும் நிகழ வேண் டும். அனவரதமும் வீட்டில் வாசம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் அதிகாலையில் வாசலில் கோலமிடச் சொல்கிறது சாஸ்திரம். கோலமிட்ட வீட்டில் அம்பிகை மிகுந்த கனிவுடன் சுபிட்சத்தை வழங்க எழுந்தருள்கிறாள் என்பது ஐதீகம்!

மேலும் ஒவ்வொரு வளர்பிறைபஞ்சமி திதியிலும் வராஹி தேவியை மனதார வழிபடுங்கள். வீட்டில் விளக்கேற்றுங்கள். தேவியின் திருநாமங்களைச் சொல்லி உங்கள் பிரார்த்தனைகளை அவளிடம் சொல்லி முறையிடுங்கள்.

வளர்பிறை பஞ்சமி நாளில், வராஹியை நினைத்துக் கொண்டு, காலையிலும் மாலையி லும் வீட்டில் விளக்கேற் றுங்கள். ஒரு பத்துநிமிட மேனும் அவளின் திருநாமங்களைச் சொல்லி, உங்கள் கோரிக்கை களையெல்லாம்




சொல்லி முறையிடுங்கள். கஷ்டங்கள் அனைத் தையும் சொல்லி மன் றாடுங்கள்.

இதுவரை உள்ள தடைகள் அனைத்தையும் தவிடுபொடியாக்குவாள். எதிர்ப்புகளையும், பிரச்சனைகளையும் தலை தெறிக்க ஓடச் செய் வாள் வராஹிதேவி.





# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)-ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

நாம் மனதைக் கட்டுப்படுத்துவதால் என்ன பயன்களை அடையலாம் என்று சிந்தித்துப் பார்த்தால் முதலில் நாம் ஆன்மீகத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். நமக்கு ஆன்மீக வழியில் மன அமைதி, மன சாந்தி போன்றவை கிடைக்கும். மேலும் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை, பொறுமை, ஆழ்ந்து சிந்திக்கும் திறமை போன்றவைகள் நம்மை அறியாமல் வளரும். நாம் மனதை நம் வசத்தில் கொண்டு வரும்போது சொத்து சுகங்களுடன் ஆடம்பரமாக உலகில் வாழும் பணம் படைத்தவர்களுக்கு கிடைக்காத மன நிம்மதி நமக்கு எளிதில் கிடைக்கும் என்பதை அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நம் கண்ணுக்குத் தெரியாத இந்திரியமான மனம், ஆன்மீகத்தில் கூறியுள்ளபடி தியானப் பயிற்சியினை மேற்கொண்டால் மனம் நமக்குள் கட்டுப்படும். கண் காது மூக்கு வாய் மெய் போன்ற கர்ம இந்திரியங்கள் நம் கண்களுக்குத் தெரியக்கூடிய இந்திரியங்கள் ஆகும். நமது கர்ம இந்திரியங்களை கட்டுபடுத்தினால், மனம் நம் கட்டுபாட்டுக்குள் வந்து விடும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக கண்களை நல்லவைகளை மட்டும் பார் என்று நாம் நினைத்தால், அவைகள் நல்லவைகளை மட்டும் பார்க்கும். அதேபோல் காதுகளை ஆன்மீகக் கருத்துகளை மட்டும் கேட்க வேண்டும் என்று மனதில் நினைத்தால் அதன்படி ஆன்மீகக் கருத்துகளில் மட்டும் காதுகள் ஈடுபடத் தொடங்கும். அதற்கு நமக்கு கர்ம இந்திரியங்களை கட்டுப்படுத்தும் உறுதியான மனம் நம்மிடம் இருக்க வேண்டும் என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

நாம் ஞானத்தை அடைய வேண்டுமானால் நம் கண்ணுக்குத்தெரியாத மனம்தான் காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நம் வெளி இந்திரியங்கள் எப்படி இருக்கிறது என்றால் துவாரங்களாக கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என ஐம்புலன்களாக இருக்கின்றன. பசி நீங்குவதற்கு வயிற்றுக்கு உணவு வேண்டும் என்றால் வெளி இந்திரியமான வாயின் மூலமாகத்தான் சாப்பிட வேண்டும். அதேபோல் மனதுக்கு உணவு கொடுக்கும் ஐந்து இந்திரியங்கள் கண் காது மூக்கு போன்ற இந்திரியங்கள் ஆகும். அவை ஐந்தும் மனதுக்கு வாசனையைக் கொடுக்கும் துவாரங்கள் என்று ஆன்மீகத்தில் கூறப்படுகிறது.

உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் ஆரோக்கியமான உணவை தேடி அதற்கு கொடுக்கிறோம். அதாவது நாம் நல்லவிதமான சத்துமிக்க உணவை சாப்பிடுகிறோம். அதேபோன்று நம் கண்ணுக்குத்தெரியாத இந்திரியமான மனது நல்ல ஆரோக்கியமாக இருக்க வேண்டுமெனில், நமது வெளி இந்திரியங்கள் மூலமாக நல்ல பயனுள்ள வாசனைகளை மனதிற்குள் பதிந்து வைத்துக் கொள்ளவேண்டும். தொலைக்காட்சி பார்ப்பதால் கண்ணுக்கு மட்டும்தான் கெடுதல் என்று நாம் அனைவரும் நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் தொலைக்காட்சி மூலம் காட்டப்படும் காட்சிகள் அனைத்தும் வெளியில் தெரியும் கண்கள் என்னும் இந்திரியங்கள் வழியாகச் சென்று நம் கண்ணுக்குத்தெரியாத இந்திரியமான நமது மனதையும் பாதிக்கும் என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். நாம் அதனை அவ்வாறு அறிந்தாலும் மனதை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு முடியாமல் தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சிகள் காட்சிகளையும் கண்கள் வழியே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

நமது கர்ம இந்திரியங்கள் மூலமாக எப்படிப்பட்ட விஷயங்களை கருத்துக்களை மனதுக்குள் பதிவு செய்யுமோ, நம் மனதும் அப்படிபட்ட கருத்துக்கள் அடிப்படையில்தான் இருக்கும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நம் கர்ம இந்திரியங்கள் மூலம் நல்ல கருத்துக்களை நம் மனத்துக்குள் அனுப்பினால் அல்லது பதிவு செய்தால் மனது ஆரோக்கியமான தூய்மையுடையதாக இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இவ்வுலகில் நல்லவைகள் தீயவைகள் என்று எல்லாமே கலந்து நிறைந்துதான் காணப்படுகின்றன. அவற்றில் நல்ல பண்புகளுடன்கூடிய கருத்துக்களை மட்டும் மனதுக்குள் நம் இந்திரியங்கள் வழியாக நிரப்ப வேண்டும் அதாவது பதிவுகள் செய்யவேண்டும். அவ்வாறு மனதை நிரப்பினால் மனம் தூய்மை அடையும் மனமும் அமைதி அடையும். மனித மனம் தூய்மை அடைவதற்கு ஆன்மிகம் துணை செய்கிறது.

நாம் எந்தக் கருத்துக்களை கொடுத்தால், செயல்பாடுகள் செய்தால்

26

பொறாமை கோபம் போன்ற தீய குணங்கள் நம்மிடம் தலைதூக்குமோ அவற்றை இந்திரியங்கள் மூலம் திணிக்காமல் பயனுள்ள கருத்துக்களை மட்டும் நம் இந்திரியங்கள் வழியாக நிரப்புவதற்கு மனதில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது நமது மனதிற்கு இந்திரியங்கள் வழியாக நல்ல செயல்பாடுகள் கருத்துக்களை மட்டும் அனுப்ப வேண்டும். அதற்கு மாறாக வேண்டாத விசயங்களை செயல்பாடுகளை கண், காது, நாசி போன்ற கர்ம இந்திரியங்கள் மூலம் மனதிற்குள் செல்வதற்கு நம்மை அறியாமல் முயற்சி செய்தால் அதற்கு தடை போட்டுவிட வேண்டும். நமது கண், காது, போன்ற கர்ம இந்திரியங்கள் மூலமாகத்தான் நம் மனம் வெளியே செல்கிறது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

நமக்கு தேவையற்ற விஷயங்களாக செயல்களாகபாடுகளாக இருந்தால் நமது கர்ம இந்திரியங்களை பயன்படுத்தாமல் நமது கண்கள், காது நாசி போன்ற இந்திரியங்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்து மனதை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். எடுத்தக்காட்டாக ஓர் இடத்தில் சண்டைசச்சரவுகள் நடந்து கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அங்கு வேண்டாத வார்த்தைகள் நடமாடிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நாம் தேவையற்ற விசயங்களை காது கொடுத்துக் கேட்காமல் இருந்து விடலாம். இல்லை என்றால் நாம் அதனை மனதுக்குள் அனுப்பாமல் தேவையற்ற விஷயங்களை தடை செய்யும்பொருட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்று விடலாம்.

இதேபோன்று நமது மற்ற கர்ம இந்திரியங்களையும் கட்டுப்படுத்தி மனதை ஆரோக்கியமாக தூய்மையாக வைத்துப் பழகவேண்டும். உலகில் காணும் தீய செயல்பாடுகளைப் பார்க்கமாட்டேன் தீயவைகள் எதையும் கேட்க மாட்டேன் தீயவைகளைப்பற்றி பேசமாட்டேன் என்று நமக்கு சுட்டிக்காட்டும் மூன்று குரங்கு பொம்மைகளை நினைத்துக் கொள்ள வேண்டும். நல்லவைகளை பார்க்க வேண்டும், நல்லவைகளை கேட்க வேண்டும் நல்லவைகளை பேசவேண்டும் என்று நாள்தோறும் ஜெபம்போல் மனதிற்குள் நினைத்துக் கொள்ளவேண்டும்.

நமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் சுவையறியும் நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். நாக்குக்கு சுவையாக இருந்தால் அது உடலுக்குள் உணவை அளவுக்கு அதிகமாக அனுப்பிக்கொண்டே இருக்கும். நாம் நாவை அடக்கி உணவை உண்பதில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். நம் கர்ம இந்திரியங்கள் வழியாக மனதுக்குள் அனுப்பும் விசயங்களை இதுபோல் வடிகட்டி அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்புவதில் கவனமுடன் நாம் இருந்தால் நம் மனம் நம் கட்டுக்குள் வந்துவிடும்.

கண் தேவையற்றவைகளைப் பார்க்க மாட்டேன். காது தேவையற்ற விசங் களைக் கேட்க மாட்டேன் வாய் தேவையற்றவைகளைக் பேசமாட்டேன். என்று நம் கர்ம இந்திரியங்களை கட்டுபடுத்த வேண்டும். நமக்குத் தேவையானவை தேவையற்றவை என்று எப்படி நாம் அறிந்து கொள்வது என்றால், அதற்கு ஆன்மிகம் வழிகாட்டுகிறது. நமக்கு விவேக அறிவு அதற்குத் துணை புரிகிறது. இந்திரியங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்றால், எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் நமக்குள் நல்ல பண்புகள் குணங்களுடன் இருப்பதற்கு சில கட்டுப்பாடுகளை விதித்து அதன்படிதான் இருப்பேன் என்று மன உறுதியுடன் இருப்பதற்கு ஆன்மீக வழியில் முயற்சி செய்து வெற்றி காண வேண்டும். மனதை ஆன்மீக வழியில் நின்று அமைதிபடுத்துவேன் இந்திரியங்களைக்



என் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவேன் நல்ல கருத்துக்களை இந்திரியங்கள் மூலம் மனதிற்குள் அனுப்புவதில் கவனமாக இருப்பேன் என்று மனதில் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கும்போது தீய குணங்களுடன் பிறப்பதில்லை. அந்தக் குழந்தை நல்லவனாக கெட்டவனாக மாறுவதும் அவன் தாய் வளர்க்கும்விதத்தில் மட்டும் அல்ல குடும்பச்சூழ்நிலை மற்றும் சமூகச்சூழ்நிலையும் காரணமாகும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். மனிதர்கள் ஆரம்பத்தில் சூழ்நிலைக்கு குழந்தைகள்போல் அடிமையாகாமல்தான் இருக்கிறான். நாளடைவில் மனிதன் சூழ் நிலைக்கு அடிமையாகி துன்பத்தில் வீழ்ந்து விடுகிறான். சூழ்நிலை அடிமையில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால் அதற்கு உலகில் காணப்படும் நல்ல பண்புகளை கருத்துக்களை செயல்பாடுகளை நம் மனதில் பதிய வைக்க வேண்டும். அதற்கு நமது கர்ம இந்திரியங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்திரியங்களையும் மனதையும் நம் கட்டுபாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமானால் ஆன்மீக வழிதான் அவனுக்குப் பெரிதும் துணை செய்யும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

எடுத்துக்காட்டாக நண்பர் ஒருவர் ஒரு திருமண விழாவிற்கு கலந்து கொள்ள செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். திருமணம் முடிந்து சாப்பிடச் செல்வதற்கு முன்பு இரண்டு இட்லி ஒரு வடை மட்டும்தான் சாப்பிட வேண்டும் அதற்குமேல் சாப்பிடக்கூடாது என்று அவர் மனதில் நினைத்துக்கொண்டு இலையின் முன்பாக மற்றவர்களோடு உட்காருகிறார். ஆனால் அவர் இருக்கும் சூழ்நிலையின் காரணமாகவோ, இட்லி ருசியின் காரணமாகவோ ஐந்து இட்லி இரண்டு வடைகள் என்று சாப்பிட்டு முடிக்கிறார். இந்த இடத்தில் அவர் தனது கர்ம இந்திரியமான நாவினை அவர் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளாமல் இருப்பதே இதற்குக் காரணம் ஆகும். அவர் மனதில் நினைத்தற்கு மாறாக அதிக அளவில் அவர் சாப்பிடுவதற்கு மனக்கட்டுப்பாடு இல்லாமையும் ஒரு காரணமாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நண்பர் ஒருவர் பேசிப் பழகும்போது தேவையற்ற விஷயத்தை பேசி கருத்து வேறுபாடு கொள்கிறார். அதனால் அந்த நண்பரை எங்கு பார்த்தாலும் எதுவும் பேசக்கூடாது என்று மனதில் எண்ணிக் கொள்கிறோம். ஆனால் எதேச்சையாக ஓரிடத்தில் அந்த நண்பரை பார்க்கும்போது உணர்ச்சி வேகத்தில் பழக்கதோஷத்தில் எதைக் கேட்கக்கூடாது என்று நினைத்தமோ அதை அந்த நண்பரிடம் நம்மையும் அறியாமல் கேட்டு விடுகிறோம். நமது மன உறுதிப்பாடு அங்கு தோல்வி அடைந்து விடுகிறது. காரணம் அவரைச் சந்தித்த சூழ்நிலை உணர்ச் சி களுக்கு அடிமையாகி அவ்வாறு நாம் நடந்துகொள்ளும்படி செய்து விடுகிறது. இதிலிருந்து நமக்கு வெளியில் நடக்கும் சூழ்நிலைதான் நமது பேச்சுக்கள் சிந்தனைகள் செயல்பாடுகள் ஆகியவற்றினை முடிவு செய்கிறது என்பது தெரிகிறது. இதிலிருந்து நாம் விடுபடுவதற்கு வேண்டுமென்றால் நமது இந்திரியங்களை நம்மால் கட்டுப்படுத்து முடியவில்லையென்றால், அந்த இடத்திலிருந்து அதாவது அந்த நண்பரைப் பார்த்தாலும் அவரை பார்க்காது மாதிரி சென்றுவிட வேண்டும். அதாவது அந்தச் சூழ்நிலையில் இருந்து விலகிச் சென்று விடவேண்டும். இதுதான் தக்க உபாயம் ஆகும்.

இராமாயணத்தில் வரும் இளையபெருமாள் இலட்சுமணன் கிழித்தக் கோட்டினை சீதாபிராட்டி அப்போது தாண்டாமல் இருந்திருந்தால், அவள் இராவணன் என்ற அரக்கனால் கவர்ந்து சென்றிருக்கமாட்டாள். மேலும் சீதை தன்னோட கணவர் இராமபிரானின் வீரத்தில் நம்பிக்கை வைத்திருந்தால், கணவர் இராமபிரானைக் காப்பாற்றுவதற்காக இலட்சுமணனை அவ்விடத்தில் இருந்து செல்லும்படி கோபத்துடன் கூறியிருக்க மாட்டாள். காரணம் அந்த நேரத்தில் அந்த இடத்தில் சீதை கணவன் இராமபிரான் மேல் உள்ள அளவுக்கு மீறிய அன்பின் காரணமாக உணர்ச்சிக்கு அடிமையாகி விடுகிறாள். இதுபோன்றுதான் மனிதர்கள் தம்முடைய இந்திரியங்களைக் கட்டுப்படுத்தாமல் அதன் போக்கில் சென்று மனிதர்கள் துன்பங்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஆன்மிகம் நமது இந்திரியங்களை கட்டுப்படுத்துவதற்கு பல வழிமுறைகளைக் கதைகள் காவியங்கள் மூலம் எடுத்துக் கூறுகிறது.

ஒருவன் எந்தச் சூழ்நிலைக்குச் சென்றால் அதனால் தான் பாதிக்கப்பட்டு விடுவோம் என்று மனதில் தோன்றினால், தனது சக்திக்கு மீறியதாக இருந்தால் அதனை எதிர்கொள்ளாமல்

அந்தச் சூழ்நிலைக்கு அடிமையாகாமல் விலகிச் சென்று விடுவது மற்றொரு வழிமுறையாகும். ஓரிடத்தில் நான்கு நண்பர்கள் வீணாகப் பேசி அரட்டை அடித்துக் கொண்டு இருப்பதாக வைத்துக் கொள்வோம். நாம் அங்கு சென்றாலும் நண்பர்கள் அரட்டையில் கலந்து கொள்ளாமல் ஓரிடத்தில் அமைதியாக இருந்து விடலாம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு முடிவுடன் அங்கு சென்று உட்கார்ந்து விடுவோம். ஆனால் சிறிது நேரத்தில் நாமும் அந்த வீண் அரட்டையில் நம்மையும் அறியாமல் கலந்து கொள்ளும்படி சூழ்நிலை அப்போது அமைந்து விடுகிறது. நமது முடிவில் ஒரு உறுதிப்பாடு இல்லாமையே இதற்கு காரணமாகும்.

இதுபோன்ற நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் நமக்கு இந்திரிய கட்டுப்பாடுகள் வரவேண்டுமானால், துஷ்டர்கள் என நமக்குத் தெரிந்தவுடன் அப்படிப்பட்ட துஷ்டர்களிடமிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும். நாம் சத்சங்கத்தில் அடிக்கடி கலந்து அல்லது தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். உணவு விசயத்தில் கட்டுப்பாடு வேண்டுமானால் உணவு அமிர்தமாக இருந்தாலும் அளவோடு சாப்பிட வேண்டும். ஆரோக்கியமான உணவினை தேர்ந்தெடுத்துச் சாப்பிட வேண்டும். வாரம் ஒருமுறை உண்ணாவிரதத்தினை கையாள வேண்டும். ஒருநாள் மட்டும் சாப்பிடாமல் இருந்து உண்ணாவிரதத்தினை கடைபிடிக்கலாம்.

பிரச்சனைகள் என்று வந்து விட்டால் அதிலிருந்து விடுபடுவதற்கு நியாயங்களை தன்மையாக சம்மந்தப்பட்டவரிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதனை எதிர்தரப்பில் கேட்கவில்லையென்றால், நாம் மவுனமாக இருந்து விட வேண்டும். இந்திரிய ஒழுக்கம் இந்த மன பக்குவம் வரவேண்டுமெனில் ஆன்மீக வழியில் சென்றால் மனப்பக்குவம் நமக்கு தானாகவே ஏற்பட்டு விடும். நமக்கு நாமே நம்மைச் சுற்றி இந்திரிய ஒழுக்கம் என்னும் வேலியை அமைத்துக்கொண்டு நம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். உலக விசயங்களில் நாம் சிந்தித்து செயல்புரிய வேண்டும். நாம் இந்திரிய ஒழுக்கத்தைக் கடைபிடித்தால் மனதில் வேண்டாத எண்ணங்கள் குப்பைபோல் சேர விடாது. அதன்மூலம் நாம் தேடும் விரும்பும் மன அமைதியும் கிடைக்கும் என்பதை உணரலாம்..

பொதுவாக காலையில் எழுந்தால் எந்தவிதமான மன அழுத்தமும் இல்லாமல் மனமைதியுடன் இருப்போம். நாம் உலக விஷயங்களில் ஈடுபடும்போதுதான் மனமும் பலவிதமான எண்ணஅலைகளில் அலைபாய்ந்து துன்பங்களுக்கு ஆளாக நேரிடுகிறது. நாம் கர்ம இந்திரியங்களை சூழ்நிலையின் காரணமாக தவறான முறையில் பயன்படுத்தும்போது மனம் சஞ்சலம் கொள்வதற்கு ஆரம்பித்து விடுகிறது. மன அமைதி கொள்வதற்கு கண்களை மூடி தியானம் செய்கிறோம் என்று வைத்துக் கொண்டால், நாம் இதற்கு முன்பு நம் மனதில் கர்ம இந்திரியங்கள் மூலம் பதிந்துள்ளவைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக காட்சிகளாக மனதில் வந்து ஓடிக்கொண்டேயிருக்கும். அதாவது அழகான பொருட்களைப் பார்த்தவுடன் அதன் அழகில் மயங்கி நின்றது, அப்பொருளே நம் கண்முன்பு அடிக்கடி வந்து அதன்மீது ஆவல் கொள்ளும்படி செய்கிறது. இதனை நாம் இந்திரிய கட்டுப்பாட்டுகளை ஆன்மீகவழியில் சென்று கடைபிடிக்கும்போது நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

இந்திரிய ஒழுக்கத்தை எப்படிக் கடைபிடிக்க வேண்டும் என்பது பற்றி வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் விளக்கிக் கூறுகிறது. கண் காது மூக்கு வாய் மெய் போன்ற ஐந்து இந்திரியங்களைப் பயன்படுத்தும்போது கவனமாக பயன்படுத்த வேண்டும். ஒரே இந்திரியத்தை தீவிரமாக பயன்படுத்தும்போது தேவையில்லாமல் அடிக்கடி பயன்படுத்தும்போது அந்த இந்திரியம் செயல்படும் சக்தியை நாளடைவில் இழந்து விடுகிறது. ஒருவர் தன்னோட சக்திக்கு மீறி கைகால்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தும் போது நாளடைவில் கைகால்களுக்கு தொந்தரவு ஏற்பட்டு அதன் சக்தியை இழந்து கால்கள் நடக்க முடியாத சூழ்நிலைகூட ஏற்பட வாய்ப் பிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

ஒருவருக்கு ஒரு இந்திரியம் பழுதுபட்டு செயல் இழக்கும்போதுதான் அதன் முக்கியத் துவத்தை அவர் உணர்ந்து கொள்வ தற்கு முடிகிறது. எடுத்துக்காட்டாக நாம் கேட்பதற்குப் பயன்படுத்தும் காது, உலகில் உள்ள வேண்டாத விஷயங்களை கேட்டோ அல்லது வெடிச்சத்தம் போன்றவற்றை அடிக்கடி கேட்டு காது கேட்கும்தன்மையை சில சமயங்களில் இழந்து விடும்படி நேரிடுகிறது. நல்ல விசயங்களை ஆன்மீக கருத்துக்கள் இனிமையான சங்கீதம் போன்றவற்றை ஆர்வமாக கேட்பதற்கு நினைக் கும்போது காது என்ற கர்ம இந்திரியம் அப்போது கேட்பதற்கு முடியாமல் போய்விடுகிறது.

பொதுவாக மனிதர்களுக்கு வயதாகி விட்டால் காது கண் போன்ற இந்திரியங்கள் எல்லாம் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று விஞ் ஞான ரீதியில் பேசுவார்கள். அவ்வாறு விஞ்

ஞானரீதியாக பார்க்கும்போது முதுமை நிலைமை அடைந்த அனைவருக்கும் எல்லாம் அவ்வாறு இந்திரியங்கள் பழுது ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் நம்மில் பலருக்கு வயதாகியும் கண் காது போன்றவை நல்ல நிலைமையில் இயங்கிக் கொண்டிருப்பதையெல்லாம் நாம் பார்க்கிறோம். அவ்வாறு விஞ்ஞானரீதியில் கூறியதுபோல் முதுமை காரணமாக கண் காது போன்றவை பாதிப்பு ஏற்படுவதில்லையே. இதனையெல்லாம் நாம் சிந்தித்து நமது இந்திரிய ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். ஆன்மிகம் இதற்கு நமக்கு வழிகாட்டுகிறது.

நாம் தொலைக்காட்சி அதிகநேரம் பார்த்தால் கண்கள் பாதிக்கப்படும் என்று விஞ்ஞான அறிவு எச்சரிக்கை செய்கிறது. நாம் அதனை ஆன்மீக மூலம் சிந்தித்துப் பார்த்தால் தொலைக்காட்சியில் வரும் காட்சிகளும் கருத்துக்களும் கண் என்ற இந்திரியம் வழியாகச் சென்று நமது மனமும் பாதிக்கப்படும் என்பதை மெஞ்ஞானம் மூலம் அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து இந்திரிய கட்டுப்பாடு இல்லைஎன்றால் மனமும் பாதிக்கப்படும் என்பதை உணரலாம். தொலைக்காட்சியில் அடிக்கடி ஆன்மீக சம்பந்தமான கோவில்குளம், சிவனடியார்கள், ஆழ்வார்கள் போன்ற ஆன்மீக அடியார்கள் வரலாறு அவர்கள் கூறிய கருத்துக்கள் மற்றும் பக்திப்பாடல்கள் போன்றவற்றை பார்க்கும்போது கேட்கும்போது மனதில் ஒருவிதமான மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்படுவதை உணரலாம்.

கெட்டபின் ஞானி என்று உலக வழக்கில் கூறுவார்கள். கெட்டபின் ஞானியாகி யாருக்கு எந்தவித உபயோகமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவன் மது குடித்து குடித்து தன்னோட உடல் பாதிப்பு ஏற்பட்டால் அவனுக்கு உடலால் எந்தவித பயனும் இல்லை. அதன்மூலம் அவன் உடல்கஷ்டம் மனக்கஷ்டம்தான் படவேண்டும். எனவே ஆன்மீக வழியில் நின்று வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் கூறியுள்ளபடி இந்திரிய ஒழுக்கத்தை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். அறிவுபூர்வமான ஆன்மீக சிந்தனை எது என்றால் ஒரு இந்திரியத்தை தவறான வழியில் பயன்படுத்தி இழப்பதற்கு முன்பாக, அதனுடைய முக்கியத்துவம் உணர்ந்து நாம் நமது இந்திரியங்கள் ஒவ்வொன்றையும் கவனமுடன் பாதுகாப்பதுதான் நமக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ள வாழ்க்கையாக அமையும் என்பதை புரிந்து செயல்புரிய வேண்டும்.

மனிதன் எந்த நிலையில் எப்படி இருந்தால் மனநிம்மதியுடன் வாழலாம் என்பதை வள்ளல்பெருமான் இவ்வாறு கூறுகிறார். 'உலகில் உள்ள அனைத்து உயிரினங்களிடம் கருணை நிறைந்தவராய் இருங்கள். உங்கள் மனதில் உயிர் இரக்கம் ஊற்றுப்போல பொங்கி வழியட்டும். அடுத்தவர் துன்பங்களைப் போக்குவதற்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். வயிற்றுப் பசிக்காக மற்ற உயிர்களைக் கொன்று உண்பது கூடாது. உயிர்க்கொலை புரிவோர் எமக்கு எந்நாளும் உறவாக மாட்டார்கள். இறைவன் உங்கள் கண்ணுக்கு எட்டுவதில்லை. ஆனால், கருத்துக்கு எட்டுவான். அன்போடு அவனை பற்றிப் பிடியுங்கள். நம்மை விட்டு விலகவே மாட்டான்.

அன்பு எங்கிருக்கிறதோ அங்கே இறைவன் இருக்கிறான். பலகாலம் இறைவனை வழிபாடு செய்வதால் உண்டாகும் நன்மைகளை எல்லாம் தர்மம் செய்து ஒரேநாளில் பெற முடியும். தர்மத்தின் பயனை உணர்ந்து கொண்டவர்கள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தர்மம் செய்வார்கள். மலை ஏறும்போது எத்தனை படிகள் என்று மலைத்து நிற்காதீர்கள். எல்லாப் படிகளையும் படிப்படியாக கடந்து விடலாம். உச்சிக் கமலத்தில் ஊற்றெடுக்கும் அமுதத்தைப் போல ஆண்டவன் இருக்கிறான். மனந்தளராமல் கடவுளைக் காணும் முயற்சியை மேற்கொள்ளுங்கள். புலால் உண்ணும் மனிதர்களைக் கண்டால் என் மனம் நடுங்குகிறது. அருட்பெருஞ்சோதியை உள்ளும் புறமும் காண்பவர்கள் மன்னுயிரைத் தன் உயிர்போல் மதித்து நடப்பார்கள் என்று நமக்கு வள்ளல்பெருமான் உபதேசம் மூலம் விளக்குகிறார்.

நாம் உடல் பயிற்சியே செய்யாமல் நமது உடல் எப்படி ஆரோக்கியமாக இருக்கும் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என அகஸ்தியர் வலியுறுத்திக் கூறுகிறார். இதிலிருந்து அவர் மந்திரமே ஜெபிக்க வேண்டாம் என்று மனிதர்களுக்குக் கூறவில்லை. மந்திரம் என்பது நமக்கு இறைவனை காண்பதற்கு அடைவதற்கு முதலில் நமக்கு மனபக்குவநிலையை அடைவதற்கு உதவி செய்கிறது என்ற அர்த்தத்தில்தான் நமக்கு கூறுகிறார்.

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Categories
Home
Top charts
New releases
Apps
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices.
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை
Google Play